
ஓம் சாயிராம்

# சாயி மார்க்கம்

## சத்திய சாயி மனித மேம்பாட்டுக்கல்வி
## விசேட மலர்

மே - டிசெம்பர் 2009

இலங்கை
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்
தமிழ் சஞ்சிகை



# சாயி மார்க்கம்
# Sai Markam


| மலர்: 16<br>இதழ்: 43 | ஒரே ஒரு மதம் அது<br>அன்பு என்னும் மதம் | மே- டிசம்பர்<br>2009 |
|---|---|---|



ஆசிரியர்:
வைத்திய கலாநிதி.இ.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 021 2222832 021 2225580

துணை ஆசிரியர்:
திரு. S. R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி, தாவடி,
கொக்குவில் தொ.பே: 021 2225442



*இலங்கை தனிப்பிரதி ரூபா 50/=*
*வருடச்சந்தா (4 பிரதிகள்) ரூபா 200/=*

*வெளிநாடு வருட சந்தா U.S டொலர் 15*

சந்தா அனுப்பும் முகவரி :
ஆசிரியர்,
சாயிமார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

காசோலை: Sai Markam
Sathya Sai Seva Org (NZ)
A/No 0402301 - 1
Hatton National Bank
Jaffna, Sri Lanka.


## பொருளடக்கம்


1. ஆசிரியர் தலையங்கம் ....................2
2. கல்வி முறையின் பரிணாமம்....................3
3. சத்திய சாயி கல்வி முறை ....................7
4. சத்திய சாயி கல்வி முறையில் ஆசிரியரின் பங்கு ....................11
5. சத்திய சாயி பாடசாலை ....................14
6. சாயியின் மார்க்கத்தின் பரிணாமம் .......16
7. பகவானின் தூரநோக்கிய பார்வை ........19
8. சரணாகதி....................22
9. சேவையினால் ஏற்படும் அகமாற்றம்........23
10. நான் யார்? நான் நானே தான். நான் கடவுள் ....................25
11. மனித தர்மம் ....................27
12. கேள்வி பதில் ....................28
13. காலக்கணக்கு ....................30
14. பிராந்தியச் செய்திகள். ....................32



ஆசிரியர் தலையங்கம்

# கல்வி முறை

ஒரு தேசத்தின் அல்லது இனத்தின் பண்பாட்டை மதிப்பீடு செய்வதாயின் அங்கு நடைமுறையிலிருக்கும் கல்வி முறையை முக்கியமாக அவதானிக்க வேண்டும். கல்வி முறையினால் மட்டுமே பாரம்பரிய மாற்றத்தை மிக விரைவில் ஏற்படுத்தலாம். தற்போதய பண்பாட்டு நிலை முன்னைய கல்வி முறையினால் பெரிதும் நிர்ணயிக்கப்படுகின்றது. தற்போதய கல்வி முறை வருங்கால நடத்தைகளைப் பெரிதும் நிர்ணயிக்கும். "நிகழ் காலம் மிகவும் பொன்னானது அது எங்கும் வியாபித்திருக்கும் தெய்வீகத்தையே குறிக்கிறது." என்று பகவான் சத்திய சாயி பாபா அறிவுறுத்தியுள்ளார்.

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாரிய அளவில் கடுகதி வேகத்தில் முன்னேறினாலும் மனிதநேயம் குன்றியுள்ளதென்பதை எவரும் மறுக்க முடியாது. இந்நிலை மனித சமூகத்தையே நிர்மூலமாக்கி விடும். இவ்வழிவு நிலையை எவ்வாறு சீர்ப்படுத்தலாமென்று கல்விமான்கள், ஆன்மீக மகான்கள் எனப் பலர் பலவிதமான வழிகளில் ஆராய்ந்து கல்வி முறையைத் தான் சீர்திருத்த வேண்டுமென்று முடிவுக்கு வந்தார்கள். பல ஆய்வு அறிக்கைகள் மனிதப் பண்புகளை கல்வி முறையில் புகுத்த வேண்டுமென்று அறிவுறுத்தினாலும், எவ்வாறு செய்வதென்பதில் ஒரு முடிவுக்கும் வரவில்லை என்பதோடு ஒரு முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. இச் சீர்குலைவை எவ்வாறு திருத்தலாம் என்று அடியார்கள் பகவானைப் பிரார்த்தித்து, பகவான் சத்தியசாயிபாபாவிடம் கேட்டதன் பலனாக சத்திய சாயி கல்வித்திட்டத்தை அவர் எமக்கு அருளியுள்ளார். இக் கல்வித்திட்டம் (Sathya Sai Education) முன்பள்ளி முதல் பட்டப்பின் படிப்புள்ள மாணவ சமூகத்திற்கும் ஏனைய சமூக நிறுவனங்களுக்கும் மக்கள் அனைவருக்குமே அளிக்கப்படுகின்றது.

பகவான் "கல்வியின் நிறைவு ஒழுக்கம்" என்ற நோக்கத்துடன் மனிதனிலுள்ள தெய்வீகத்தை வெளிக் கொணர்வதே என்ற தூர நோக்குடன் "எஜுகெயர்" என்ற பதத்தின் கீழ் தத்துவம், நோக்கு, செயற்பாடு சகலதையும் இணைத்துள்ளார். கல்வி என்ற தமிழ்ச் சொல் கல்லுதல் என்ற பதத்திலிருந்து எழுந்தது, கல்லுதல் என்றால் தோண்டுதல் என்ற கருத்துமுண்டு. உள்ளிருக்கும் நற்பண்புகளைத் தோண்டி வெளிக் கொணர்தல் என்பதே இதன் அர்த்தமாகும். எடியுகேசன் (Education) என்ற ஆங்கிலச் சொல் "எஜுகெயர்" (Educare) என்ற இலத்தின் பதத்திலிருந்தே புணைக்கப்பட்டது. இதன் கருத்தும் உள்ளிருப்பதை வெளிக் கொணர்வதென்பதேயாகும். தற்போது உலகில் நடைமுறையலிருக்கும் கல்வி முறையை "எடுகேசன்" என்றும், சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியை எஜுகெயர் என்றும் பகவான் வேறுபடுத்தியுள்ளார். வேறுபாடுகளைப் பற்றியும், உலகளாவிய ரீதியில் எவ்வாறு இக்கல்வி முறை செயற்பட்டு நடைபெறுகிறதென்பதையும் இன்னொரு கட்டுரை யில் அறியத் தரப்பட்டுள்ளது.

ஜெய் சாயிராம்

- *ஆசிரியர்*

ஓம் ஸ்ரீ சாயிராம்

# கல்வி முறையின் பரிணாமம்



மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே கல்வி முறையும் தோன்றியது. ஆதி காலத்தில் மனிதனின் சிறுவர்கள் மூத்தவர்களுடன் சேர்ந்து வேட்டையாடுவதையும், உணவு சேகரிப்பதையும் சில ஆசாரங்களையும் கற்றுக்கொண்டார்கள். அவர்களின் **வாழ்வே பாடசாலையாக அமைந்தது**. மனிதன் நாகரீகமடையத் தொடங்கி வளர்ச்சி பெற கல்வி முறையும் வளர்ச்சியடையத் தொடங்கியது. ஆதி காலத்தில் வாழ்க்கை முறை, வழிபாடு கலை எல்லாமே ஒன்றாகவிருந்தது. சமய நெறியில் வாழ்பவரே கல்வி அறிவையும் பெற்றிருந்தார்கள். இதிலிருந்து எமது பிராந்தியத்திலே தோன்றியது தான் **குருகுலக் கல்வி முறை**. இதில் மாணவன் குருவின் வீட்டில் 7 வயதில் பெற்றோர்களால் விடப்பட்டு அங்கே 12 வருடங்கள் வாழ்வதே முறையாகும். குருவுக்கும், வீட்டிற்கும் தேவையான உதவிகள் எல்லாம் செய்வது மூலமும், குருவின் அருகிலிருந்து ஆசாரங்கள் கிரியைகள், தொழுகைகள், மந்திரங்கள் மற்றும் பல்கலையும் மாணவன் கற்றுக் கொள்கிறான். மேலும் அவன் சாத்திரங்களையும் வேதங்களையும் குருவிடமிருந்து கேட்டல் மூலமே அதிகமாகக் கற்றுக் கொண்டான். இக் கல்விக் காலத்தில் பெற்றோர்கள் ஒரு வகையிலும் உரிமை கொண்டாடுவதில்லை. கல்விக் காலம் முடிந்ததும், குருதட்சணை கொடுத்து குருவின் ஆசியும் பெற்று வீடு திரும்புவார்கள். ஏனைய பிராந்தியங்களில் இம்மாதிரியான கல்வி முறை பாசறைகளிலும், மடாலயங்களிலும், ஆச்சிரமங்களிலும் செயற்பட்டது. வயதெல்லை கல்வி பயிலும் காலம் வேறுபட்டாலும் குரு சீடர் முறையே நிகழ்ந்தது.

நாகரீகம் வளர்ந்து, கிரேக்க நாகரீகம் உச்சமடைந்த காலத்தில் (469-322 கி.மு) கிரேக்க தத்துவஞானிகளான சோக்கிரட்டீஸ், பிளேட்டோ ஆகியோர் கேள்வி பதில் மூலம் சிந்தனை கிளறல் (Brain storming) மூலம் இளைஞர்களுக்குக் கற்பித்தார்கள். இம்முறையில் பல கேள்விகள் கேட்டு விசாரணைகள் மூலமே விளக்கமும், பதிலும் கிடைக்கப் பெற்றன. இத் தத்துவ ஞானிகள் அத்வைதம், எல்லாம் ஒன்று என்ற கொள்கையிலேயே வாழ்ந்தார்கள். பழைய உரோமானியக் கல்வி முறையின் நோக்கம், போர் முனையில் வெற்றியடைவதற்காக குழந்தைகள் வன்மை மிகுந்தவர்களாக வளர வைப்பதேயாகும். வீடே பெரும்பாலும் கற்குமிடமாக இருந்தது.

"இன்றைய கல்வி முறையானது (Industrial Model) பொதுப் பரீட்சைகளை நோக்காகக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளமையால் பாடசாலைகளும் இந்நோக்கத்தை கருத்திற் கொண்டு இயங்குகின்றன. ஒரு தனிப்பட்ட பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகளே அப்பாடசாலை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையச் செய்கின்றன. இதன் காரணமாக பாடசாலைகளுக்கிடையே ஆரோக்கியமற்ற போட்டி நிலை தோன்றியுள்ளது. விளையாட்டு மற்றும் இணைப்பாடச் செயற்பாடுகளிலும் (Co curricular Activities) இப் போட்டி நிலை உக்கிரமடைந்து வருகின்றது. இக் கல்வி முறை அந்நியராட்சியின் கீழிருந்த காலத்திலும் பின்பு சுதந்திரமடைந்து அரசாங்கத்தை நடத்துவதற்கும் தேவையான எழுத்து கணக்குகளில் தேர்ச்சி யடைந்தவர்களையே உருவாக்கியது. இப்போதும் இதே நிலையே நீடித்துள்ளது." (1) "ஒரு சமுதாயம்

அறிவியல் தொழில் நுட்ப மேம்பாடுகளில் உயர்ந்து விளங்கினால் அது வாண்மை மிக்க சமுதாயமாகக் கருதப்படத் தக்கதேயொழிய, நல்ல சமுதாயமெனக் கொள்ளப்படத்தக்கதல்ல. மனிதநேயமற்ற கல்வியும், திறமையும் அழிவுச் சக்திகளாக மாறலாம். மனிதம் மறுக்கப்பட்டு மனிதனால் உருவாக்கப்படும் பொருட்கள் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றன" (2) மனித நேய வீழ்ச்சியைச் நிவர்த்தி செய்ய, பலவகையான அறநெறி வகுப்புக்கள், பாடசாலைகள் இயங்கத் தொடங்கின." (3) பாரிய அளவில் உன்னத மாற்றத்தை ஏற்படுத்தவே பகவான் சத்திய சாயி பாபா மனித மேம்பாடு இணைந்த கல்வி முறையை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். காலத்திற்குக் காலம் கல்வி முறையின் நோக்கு அல்லது தத்துவத்தை பல கல்விமான்கள், ஆன்மீக மகான்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இவர்களின் கூற்றுக்கள் சில பின்வருமாறு:

**மகாத்மா காந்தி (1869-1948) அவர்கள் ஆதாரக் கல்வியைப் பற்றிக் கூறியது:**

- கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் கொடுக்கப்பட வேண்டும்.
- தாய் மொழியில் கற்பிக்க வேண்டும்.
- சமுதாயத்திற்குப் பொருத்தமான கைப்பணி மையமாக அமைய வேண்டும்.
- துதித்தல் உள்ளடக்கப்பட வேண்டும்.
- கல்வி வாழ்க்கையோடு இணைந்ததாகவும், செய்து கற்றல், வேலையூடே கற்றல் என்று இருக்க வேண்டும்.
- இதற்கு இத்தத்துவங்களில் முழு நம்பிக்கை கொண்ட உற்சாகம் மிகுந்த செயற்றிறன் உள்ள ஆசிரியர்கள் தேவை.

**கவி தாகூரின் கருத்து (1861 - 1941)**

இவர் சாந்தி நிகேதனம் (1901) விசுவ பாரதிப் பல்கலைக்கழகம் (1922) என்ற இரு கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளார். இவர் கூறியவை.

- மனித குலத்தின் மேம்பாட்டிற்கான கருவியாகக் கல்வி செயற்பட வேண்டும்.
- குழந்தையின் இயல்பும் தேவைகளும் வலியுறுத்தப்பட வேண்டும்.
- சுதந்திரமாகவும், இயல்பான முறையிலும் வாழ்க்கைப் பயனுள்ள வகையிலும், கல்வி முறை அமைய வேண்டும்.
- இசை, ஓவியம், நாடகம் ஆகிய நுண்கலைகளும் முக்கியப் படுத்தப்பட வேண்டும்.

**சுவாமி விவேகானந்தர் (1863 - 1902)**

- வெறும் வயிறு வளர்க்க உதவும் கல்வி கல்வியாகாது.
- குழந்தைகளின் இயல்புக்கேற்ப அமைய வேண்டும்.
- தன்னம்பிக்கை, உடல், உள உறுதி வளர வேண்டும்.
- மனக்குவியலை (Concentration) ஊக்குவிக்க வேண்டும்.
- முழுமையான புலனடக்கத்தினை ஊக்குவித்து, தெய்வீகத் தன்மையை வெளிக் கொணர வேண்டும்.

இவரின் தாரக மந்திரம் "விழிமின் எழுமின், விடாமின்" என்பதேயாகும்.

**மகான் அரவிந்தர் (1872 - 1950)**

- "உள்ளத்தின் சிறப்புத் தன்மையை வளர்த்து, வெளிக் கொணர்வது உண்மைக் கல்வியின் நோக்கம்"
- உயர் நிலையில் (Super mind) செயற்பட உள்ளத்திற்குப் பயிற்சி அளித்தல் கல்வியின் பணியாக அமைய வேண்டும்.
- ஆன்மீகமும் விஞ்ஞானமும் இணைய வேண்டும். வாழ்க்கை, தொழில், கல்வி, ஆன்மீகம், சமூகப்பிணைப்பு, ஆகியன இணைந்த செயற்பாட்டு ஆரோவில் (Aurovil) கிராமத்தில் நடைமுறையிலுள்ளது.

**நமது நாடு இந்தியா போன்று அயல் நாடுகள் சுதந்திரமடைந்த பின் எழுந்த கருத்துக்கள்:**

கல்வி அமைப்பு நாட்டு வளர்ச்சியுடன் இணைக்கப்பட வேண்டும். இசைவான நல் வளர்ச்சி, சமூக மாற்றம், சமுதாய மேம்பாடு நாட்டின் வளர்ச்சி, ஒற்றுமையுணர்வு இவற்றைத் திட்டமிட்டு செயற்படுத்துவது தான் கல்வியின் நோக்கம்.

அறிவியல் தொழில்நுட்ப அறைகூவல்களுக்கு ஈடுகொடுக்க வேண்டும், பொருளியல் நிலையை உயர்த்த வேண்டும். என்பனவாகும்.

குழந்தைகளின் கல்வி முறையில் ஏற்பட்ட சிந்தனைகள் சில:

**ஜோன் டியூவி (John Dewey) 1859 - 1952, அமெரிக்க சமூகவியல் நிபுணரின் சிந்தனை:**

- செய்தும், சிந்தித்தும் குழந்தைகள் வளர வேண்டும்.
- குழந்தையின் இயற்கைக் கவர்ச்சிகளை பிறருடன் பேசுவதும், கருத்துப் பரிமாறுவதும், ஆராய்ந்து புதியவற்றைக் கண்டுபிடிப்பது, பொருள்களை ஆக்குவது கலைகளில் தனது ஆற்றல்களை வெளிப்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவிக்க வேண்டும்.
- "நான் கற்கிறேன்" என்பதிலும் பார்க்க "அனுபவங்களைப் பெறுகிறேன்" என்ற நிலை எழ வேண்டும். கல்வி ஏற்பாடு, குழந்தையின் இயல்பு வாழ்க்கை ஆகியவற்றுடன் இணைந்திருக்க வேண்டும் என்பதே **முற்போக்குக் கல்வியாளர்களின் கருத்து.**

**மொண்டிசோரி அம்மையாரின் கருத்து (Dr. Montessori 1870 - 1952):**

இவர் முதலில் நுண்ணறிவு குறைந்த குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் முறையில் ஆர்வம் கொண்டார். இவர்களுக்கான கற்பித்தல் முறைகளை உருவாக்கி பயன்படுத்தி வெற்றியும் கண்டார். பின்பு சாதாரண குழந்தைகளுக்கும் தமது கொள்கைகளையும் கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்தினார்.

- இயற்கையான சக்திகளையும், போக்குகளையும் நாம் ஒடுக்கவோ அல்லது திசை மாற்றவோ முயலுவது தவறாகும் என்பது இவரின் நிலைப்பாடு.
- கல்வி என்பது வளர்ச்சியாகும். கல்வியின் வழியே உள்ளார்ந்த பண்புகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தாமாகவே வெளிப்படுதல் வேண்டும்.
- குழந்தைகளின் தனித்தன்மை (Individuality) மதிக்கப்பட வேண்டும். இது வளர்வதற்கு சுதந்திரம் அடிப்படை, பரிசுகள் தண்டனைகள் கல்வியில் முழுமையாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
- புலப் பயிற்சி (Sense Trining) கல்வியின் அடிப்படை. புலன்களே அறிவின் வாயில்கள்.
- தசை இயக்கச் செயல்களுக்கான (Motor skills) பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டும்.
- தானே கற்றலுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் ஆசிரியரின் முக்கிய பணியாகும்.
- வாழ்க்கைச் செயல்களில் நடைமுறைப் பயிற்சியும் (Excercises practical life) சமூக வளர்ச்சிக்கான பயிற்சியும் முக்கியம்.

இப் புதுக்கல்வி முறையைச் செயற்படுத்தி, வெற்றி கண்டு இதை ஓர் உலக இயக்கமாகவும் வளர்த்தார்.

**ரூசோ (Rousseau 1712 - 1778) என்பவரின் இயற்கை கொள்கை (Naturalism) :**

குழந்தையானது வளர்ச்சியுற்ற மனிதனது சிறு பதிப்பன்று. அதற்கென்று தனிப்பட்ட தேவைகள் உள்ளன:

- குழந்தைக்கல்விக்கு சுதந்திரம் அடிப்படை
- செய்து கற்றல் (Learning by doing)
- கைத்தொழிலைக் கற்க வேண்டும்.

### கல்வியில் உளவியற் கொள்கை

மனிதனிடம் இயற்கையாக அமைந்து காணப்படும் பல்வேறு திறன்களை மலரச் செய்யக்கூடியதாக உண்மைக் கல்வி அமைய வேண்டும்.

பழைய காலத்தில் மாணவர்களது முயற்சி (Effort) வலியுறுத்தப்பட்டது.

புதிய கல்வி முறையில் குழந்தையின் கவர்ச்சியே (Interest) நடுவிடம் பெறுகிறது.

அதாவது மாணவர்களிடையே பன்முறைக் கவர்ச்சியை தோற்றுவித்தலாகும். (Doctrine of Interest) கவர்ச்சி எனும் உளச் செயலை உண்டு பண்ணுவதே கல்வியின் உடனடிப் பயனாகும். இதனால் இயற்கைத் திறன்கள் மலர்ச்சி பெறவேண்டும். (Unfolding) கல்வி மூலம் ஒருமைப்பாட்டுக் கோட்பாட்டை (Principal of Unity) விளங்கச் செய்ய வேண்டும். தானாகச் செயற்படுதல் (Self Activity) வளர்ச்சிக்கான செயல்முறையாகும். இதில் தனது ஊக்கிகளால் (Motives) உந்தப்பட்டு தனது கவர்ச்சிகளை (Interest) நிறைவு செய்தலும் ஆக்கத்திறனை (creativity) வளரச் செய்வதும் அடங்கும்.

உடல், உள்ளம் வளர்ச்சி பெற்று நனவு நிலையில் இயங்கும் மனிதன் தனது சூழ்நிலையின் அறிவு, எழுச்சி, முயற்சிக் கூறுகளுடன் உயர்நிலைப் பொருத்தப்பாட்டை பெறுவது கல்வியாகும், என்பது உளவியல் நோக்காகும்.

### சமூகவியலாளரின் நோக்கு:

சமூகத்தின் நிலைத்த தன்மைக்கு (Social stability) துணை செய்து அதனை உயர்த்துவதற்கு கல்வி உதவி செய்ய வேண்டும்.

சமூகப் பொருளாதாரம், அரசியல் போன்ற பலவகைகளில் பங்கு கொள்ளப் பயிற்சி அளிக்க வேண்டும். இதை குடிமைக்கான கல்வி என்றும் (Education for citizenship) கூறலாம்.

### டொன் பொஸ் (Don Bosco) 1815:

அன்பு முறைக் கல்வியை நெறிப்படுத்தினார். அன்பு முறையில் மாணவர் களைத் தூண்டுவது, தீமை எழுதற்கான வாய்ப்புக்களைக் குறைத்தல் ஆசிரியர் மாணவர் இடையே நல்லுறவை வளர்த்தல் ஆகியன அடங்கும். இதயத்தைத் தொடும் கல்வியாக இருக்க வேண்டும். ஒழுங்கு, தண்டனைகளால் ஏற்படாது. ஆனால் பரிசுகள் ஊக்குவிக்கும். பள்ளி, மகிழ்ச்சி தரும்பும் குடும்பம் போன்றும், கற்றல் மகிழ்ச்சி பரவிய செயலாகவும் இருத்தல் வேண்டும்.

### கல்வியும் தத்துவமும்

தெளிவான வாழ்க்கைத்திலிருந்தே கல்வி நோக்கம் எழல் வேண்டும். தத்துவம் மெய்யறிவினை அளிக்க முயல்கிறது. தத்துவம் சிந்தனைப் பகுதியென்றால், கல்வி அதனுடன் தொடர்புள்ள செயற்பகுதியாகும். எடுகேசன் (Education) என்பதன் வேர்க் கருத்து வெளிக் கொணர்தல், அதாவது ஆற்றல்கள் திறன்கள் மேம்பாடுகளை வெளிக் கொணர்தலாகும். கற்பித்தலுக்கு உயர்த்துதல் என்றும் பொருள் கொள்ளலாம்.

இயல்பாக எழும் வளர்ச்சியின் போக்கினைப் பயனுள்ள வகையில் மாற்றுவது கல்வியின் நோக்கம். இத்தகைய மாற்றத்தினைத் தோற்று விக்கும் செல்வாக்குகள் (Influences) கல்வியுள் அடங்கும். சிறந்த வாழ்க்கையின் இலக்கணம் யாது என்பதைத் தத்துவம் விளக்குகிறது. இத்தகைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள கல்வி உதவுகிறது. கல்விச் செயல்முறையின் பல்வேறு கூறுகளிடையே தொடர்பினையும் ஒருமைப்பாட்டையும் அளிப்பது தத்துவமாகும். சோக்கிரட்டீஸ், பிளேற்றோ, லாக், ரூசோ, கான்ட், ஸ்பென்சர், டூயி, காந்தியடிகள், ரஸ்ஸல், சுவாமி விவேகானந்தர் போன்ற சிறந்த

தத்துவமேதைகளும், கலிதாகூர் போன்ற இலக்கிய மேதைகளும் தங்களது காலத்தில் சிறந்த கல்வியாளர்களாக விளங்கி வந்தது கல்விக்கும் தத்துவத்திற்கும் இடையே உள்ள தொடர்பினைத் தெளிவாக்குகிறது.

ஒருவனது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் செயலாகவே கல்வி அமைகிறது.

தனிமனிதன், குடும்பத்தில் தொடங்கி, பள்ளி, சமுதாயம், நாடு, மனிதம், சமூகம் எனப்படும் நிலைகளுடன் ஒன்றி இறுதியாக குறையேதும் இல்லாப் பரம்பொருளுடன் ஒன்றுதலில் உண்மைக் கல்வி உதவ வேண்டும். இதுதான் **கருத்துக் கொள்கையினது நோக்கம் (Idealism) இருத்தல் கொள்கையும் கல்வியும் (Existentialism) கூறுவது:** தனது இருத்தல் நிலையைப் பற்றியும் தன்னைப் பற்றியும் அறியும் ஆவலை வலியுறுத்தப்பட வேண்டும்" என்பதேயாகும்.

### *புதிய கல்விக் கொள்கை*

கல்வியின் முக்கிய கட்டம் தொடக்கக்கல்வி (Primary Education). இதனால் மக்கட் சக்தி (Human resources) பெருக்கமடையும். தன்னம்பிக்கை, மக்களாட்சிப் பண்பில் பற்றுறுதி, நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவை வளரும். தற்காலத்தில் தொழில்திறன் கல்வி இதனால் பொருளாதார வளர்ச்சி என்பதற்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. யாவர்க்கும் கல்வி என்ற கோட்பாடும் உள்ளது. **எது கற்பிக்கப்படுகிறது என்பதை விட எவ்வளவு கற்கவியலும் என்பது முக்கியம்.** சமூக அறநெறி மதிப்புக்கள் நடுவிடம் பெறுதல் வாழ் நாள் முழுவதும் கற்பதற்காக, தொலைசார்க் கல்வி (Distance Education ) முறைசாராக் கல்வி (Informal Education) பகுதி நேரக் கல்வி (Part time Education) ஆகியவை செயற்படுகின்றன. தற்கால அறிவியல் போக்கில் விஞ்ஞானப் பாடங்கள், தொழில்நுட்பக் கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. "நான் கற்கிறேன்" என்பதிலும் பார்க்க "அனுபவங்களைப் பெறுகிறேன்" என்ற நிலை நிகழ வேண்டும்.

### UNESCO - டெலார்ஸ் (Delors) அறிக்கை:

கல்வியின் நான்கு தூண்களாவன

அறிவு பெறக் கற்றல்

செயலுக்கான கற்றல்

வாழக் கற்றல்

கூடிவாழக் கற்றல் ஆகியவையாகும்.


உசாத்துணை நூல்கள்.

A) கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்
An introduction to the philosophy & socialogy of Education by S. Santhanam (Chennai) 1987

(1,2) அகவிழி சஞ்சிகை ஏப்ரல் - 2006
பக் (2-8)

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சத்திய சாயி கல்வி முறை (Educare)



தற்போது உலகில் நடைமுறையிலிருக்கும் கல்வி முறையை "எடுகேசன்" (Education) என்றும் தன்னால் நெறிப்படுத்தப்பட்டுள்ள கல்வி முறையை "எஜுகெயர்" (Educare) என்றும் பகவான் சத்திய சாயி பாபா வேறுபடுத்தியுள்ளார்.

நடைமுறைக் கல்வியில் (Education) தகவல் பரிமாற்றமே (Information) முதன்மையாக நடைபெறுகிறது. இத்துடன் சில செயற் திறன்களும் விருத்தி செய்யப்படுகின்றன. முடிவில் பரீட்சையில் சித்தியடைவதும், பின்பு தொழில் தேடுவதுமே நடைபெறுகின்றன. வாழ்வதற்கு ஊதியம் பெறுவதையே இக் கல்வி நோக்காகக் கொண்டுள்ளது. எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றிய நோக்கத்திற்கு முக்கியத்துவமேயில்லை. ஆசைகள் அளவுக்கு மீறி புலனாதிக்கம் மேலோங்கி தன்னலம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அறிவுத்திறன், செயற்திறன், தொழிற்திறன் ஆகியவை ஓரளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் மனிதநேயம் வீழ்ச்சியடைந்துள்ளது.

சத்திய சாயி "எஜுகெயர்" (Educare) கல்வி முறை மனிதனில் உன்னத மாற்றத்தை (Transformation) ஏற்படுத்துவதையே நோக்க மாகக் கொண்டுள்ளது. அதாவது மனித உன்னதத்துடன் (Human Excellence) செய்திறன் (Skill) அறிவுத்திறன் (Knowledge) வளர்ச்சியும் இணைக்கப்படுகின்றது. இக்கல்வி முறையில், புலனடக்கத்தின் மூலம், ஆசைகளை ஒடுக்கி மனித உன்னதப் பண்புகளுடன், தன்னலமற்ற வாழ்வு வாழவே வழிசெய்யப்படுகின்றது. இந்நோக்கத்தை எவ்வாறு எய்தலாமென்று சத்திய சாயி கல்வி முறை செயல்முறையில் முன் பள்ளி முதல் பட்டப்பின் படிப்பு வரை எல்லா நிலைக் கல்விகளிலும், நிறுவனங்களின் செயற்பாடுகளிலும், மிகவும் தெளிவாகக் காட்டப்படுகின்றது. பகவான் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி முறை (Sathya sai Education in Human values) உலகில் பல நாடுகளில் பல வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றது.

சத்திய சாயி எஜுகெயர் (Sathya sai Educare) கல்வி முறையில் ஓர் கல்வி முறைக்குத் தேவையான தத்துவம் (Philosophy) பாடவிதானம் அல்லது கல்வி ஏற்பாடு (Curriculam ) கற்பிக்கும் முறை, மதிப்பீடு அல்லது மீளாய்வு, பல வருட அனுபவம் ஆகியன அடங்கியுள்ளன.

**தத்துவம்:**

எல்லோரிடத்தும் தெய்வீகத் தன்மை புதைந்து கிடக்கின்றது. இதை வெளிக் கொணர்வதே கல்வியின் நோக்கம். வெளிக் கொணர்வதென்றால். இப் பண்புகள் சிந்தனை, உணர்வு, சொல், செயலில் வெளிப்படுவதேயாகும். இதனால் **சிந்தனை, சொல், செயலில் ஒருமையும், தூய்மையும் ஏற்பட வேண்டும்.** படிப்படியாக புலனாதிக்கம் புலனடக்கமாக மாறி, மனம் புலன்களிலிருந்து விடுபட்டு புத்தியின் பக்கம் சார்ந்து அகநோக்கு மூலம் ஆத்மாவில் நிலைக்கின்றது. தேகாபிமானத்திலிருந்து ஆத்மாபிமானத்தை அடைகின்றது. **எல்லாம் ஒன்றேயென்ற** படைப்பின் வேறுபாட்டிலும் ஒருமையைக் காணும் நிலையை அடைவதேயாகும். கல்வி முறை படிப்படியாக பிறப்பு, இறப்பு என்ற சூழலிலிருந்து விடுபடும் இறுதி நோக்கை அடைய வழி வகுக்கின்றது. இதில் தனி மனித நோக்கு, சமூகவியல் பொருளாதார ஆன்மீக நோக்கு எல்லாமே அடங்குகின்றன. **சுருங்கக் கூறின் கல்வியின் நிறைவு ஒழுக்கம் என்பதேயாகும்.** கல்வி வாழ்க்கைக்காக அல்ல. வாழ்வதற்காகவே கல்வி என்றிருக்க வேண்டும். (Education is not for living but for life) தெய்வீகம் என்பது அன்பேயாகும்.

அன்பே எல்லா மனித மேம்பாடுகளுக்கும் அடிப்படையானது. உதாரணமாக, அன்பு சிந்தனையில் சத்தியம், அன்பு செயலில் தர்மம்: அன்பு உணர்வில் சாந்தி, அன்பு புரிந்துணர்வில் அஹிம்சையாகும். சகல மனித மேம்பாட்டுக் குணங்களும் மேற்கூறிய ஐந்து அடிப்படை மனித மேம்பாடுகளுக்குள் அடங்கும் (Five Basic Human Values) இக் கல்வி முறையில் கற்றல், கற்பித்தல், கல்வி ஏற்பாடு, கல்விச் சூழல் ஆகிய சகல கல்விச் செயற்பாடுகளிலும் மனித மேம்பாடுகள் மிளிர வேண்டும்.

சிறியவர்களின் மனம் புதிதாகப் போட்ட சீமெந்து, (Wet Cement) போன்றது. பதிவுகள் ஆழமாகப் பதிந்து நெடுங்காலத்திற்கு நீடித்திருக்கும். ஆகவே சத்திய சாயி மேம்பாட்டுக் கல்வி, முன்பள்ளி, ஆரம்பப் பள்ளி, இடைநிலைப் பள்ளி மாணவர்களையே முக்கிய இலக்குகளாக கொண்டது.

சத்திய சாயி கல்வி முறையில் மாணவனின் முழுமையான வளர்ச்சிதான் நோக்கமாக இருந்தாலும் **ஆசிரியரே மையமாகிறார்.** ஆசிரியரில் மனித உன்னதம் மிளிர வேண்டும். சிறியதோ பெரியதோ சகல செயல்களிலும் மனித மேம்பாடுகள் மிளிர வேண்டும். எந்தக் கல்வி முறையிலும் தகவல் பரிமாறல் சொல், செயல், உணர்வுகள் மூலம் நடைபெறுகின்றது. தொண்ணூறு வீதமான பரிமாறல் மௌனமாகவே (Silent message) நடைபெறுகின்றது. இதில் எண்ண அதிர்வுகள் (Thought vibrations) முக்கிய இடம் பெறுகின்றது. அதாவது ஆசிரியரைச் சுற்றியுள்ள மின்காந்த வலயம் (Electro Magnetic Aura) பிள்ளைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தண்ணீர் தாங்கியில் (Water tank) இருப்பதே பைப்புகள் (Taps) மூலமாக வெளிவரும். தாங்கியில் தெளிவான தூய்மையான நீர் நிறைய இருந்தால் அதுவே பைப்புகள் மூலமாகக் குறையாது வெளிவரும். சத்திய சாயி கல்வி முறையில் **ஆசிரியரைத் தாங்கியதாகவும், பிள்ளைகளைப் பைப்புக்களாகவும்** எடுத்து விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஆசிரியர் மனித மேம்பாடுகளின் ஊற்றாக விளங்க வேண்டும். பாடசாலையில் சகல செயற்பாடுகளும் அன்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. கட்டுப்பாடு, சுதந்திரம், பொறுப்புணர்வு, உரிமைகள், சலுகைகள், தண்டனை, போட்டிகள் எல்லாமே அன்பையே அடிப்படையாகக் கொண்டன.

சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியில் ஐந்து அடிப்படை மனித மேம்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது எல்லா மதங்களும் மகத்தானவையென்றும், மதமாற்றத் திலும் பார்க்க உன்னதமான மன மாற்றமே மேலானது என்பது வலியுறுத்தப்படுகிறது. சமூக சேவை, ஆசைக்கு வரம்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. கல்வியுடன் இணைந்த செயற்பாடுகளில் (Co curricular Activities) போட்டி, பொறாமை, தவிர்க்கப்பட்டு சகல பிள்ளைகளின் பங்களிப்பிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

### கல்விப் பாடவிதானம் / கல்வி ஏற்பாடு (Curriculam)

அந்த அந்த நாட்டில் நடைமுறையிலிருப் பதையே ஏற்றுக்கொண்டு கற்பித்தல் முறை யில் சில மாற்றங்களை ஏற்படுத்தி மனித மேம்பாடுகளை மிளிரச் செய்வதே இக் கல்வியின் அடிப்படையாகும். உயர் பள்ளி மாணவர்களுக்குத் தியானம், பிரார்த்தனை, சமூக சேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

முன் பள்ளியிலும், இடைநிலைப் பள்ளியிலும் பின்வரும் கற்பித்தல் முறை பின்பற்றப்படுகிறது.

1) அமைதி இருக்கை
2) மேற்கோள் / பிரார்த்தனை
3) கதை கூறல்
4) குழுப்பாட்டு
5) குழு முயற்சி

உயர்நிலைப்பள்ளியிலும், பல்கலைக்கழகத்திலும் விஞ்ஞான ரீதியாக, தர்க்க ரீதியாக ஆன்மீக உண்மைகளை சகல பாடங்களிலும் இணைத்துக் கற்பித்தலையே கையாளப்படுகிறது, ஆன்மீக வகுப்புக்கள், செயற்பாடுகள் மூலம் தன்னைத் தானே அறியவும், படைப்பிலுள்ள ஒற்றுமை விளங்கவும் உந்துதல் கொடுக்கப்படுகின்றது. மனக் குவிப்பையும், புத்திக் கூர்மையையும் பெருக்குவதற்கு, மூச்சுப்பயிற்சி, உடற்தளர்ச்சி, எண்ணமாக இருக்க வேண்டுமென்பதை தானே

மனதில் திரும்பத் திரும்பப் (Auto sugestion) பதிப்பதன் மூலம், திறன் வளர்ச்சியை வளர்க்கப்படுகிறது.

மாணவன், ஆசிரியர், பெற்றோர் மூவரும் சேர்ந்து இதய பூர்வமாகச் செயற்பட்டால் சகல உன்னதங்களையும் அடையலாம்.

இக் கல்விமுறை எங்கெங்கே எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது என்பதை கீழ் அட்டவணையில் பார்க்கலாம்:

1) **முறைசார் கல்வி (Formal Education)**

- சத்திய சாயி பாடசாலைகள்
- சத்திய சாயி கல்லூரிகள்
- சத்திய சாயி பல்கலைக்கழகம்
- சத்திய சாயி கல்வி நிறுவனம் (Institute of SSE)
- ஸ்ரீ சத்திய சாயி சர்வதேச நிலையம் - நியு டெல்லி (Sri Sathya Sai International Centre - New Delhi.

2) **முறைசாராக் கல்வி (Non Formal Education)**

- பாலவிகாஷ் /சாயி ஆன்மீகக் கல்வி (Balvikas)
- சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி (கல்வி நிறுவனங்களில்) (Sathya sai Education in Human Value in State and Private Schools)
- சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி - சனசமுக நிலையங்களில்
- சத்திய சாயி மேம்பாட்டுக் கல்வி - விடத்தல் பிள்ளைகளுக்கும், இளைஞர் களுக்கும்.
- சத்திய சாயி பெற்றோரியல் நிகழ்ச்சிகள்

3) **தகவல் அடங்கிய வெளியீடுகள்:**

- சத்திய சாயி பாபாவின் அருளுரைகள்.
- சனாதன சாரதி சஞ்சிகை
- பகவான் எழுதிய வாஹினி தொடர் நூல்கள்.
- சத்திய சாயி கல்வியைப் பற்றிய மகாநாடுகள்.
- சத்திய சாயி பாபாவின் நிலையங்களில் நடக்கும் கல்வி வட்டங்கள்.

4) **மின் ஊடகங்கள் மூலமாக**

- ஸ்ரீ சத்திய சாயி மத்திய அறக்கட்டளை இணையத்தளம் www.srisathyasai.org.in
- ஸ்ரீ சத்திய சாயி நூல்கள் வெளியீடு அறக்கட்டளை www.sssbpt.org.in
- ஸ்ரீ சத்திய சாயி உலக ஸ்தாபனம் www.sathyasai.org

இதயத்திலிருந்து இதயத்திற்கு மின் சஞ்சிகை www.heart2heart/media.radiosai.org/journals

சாயி வானொலி www.radiosai.org

**2006 இல் உலக ரீதியாக வெளியிடப்பட்ட புள்ளி விபரம்**

- சத்திய சாயி ஆன்மீக வகுப்புத் திட்டம் (Sai Spritual Education)

| | | |
|---|---|---|
| பிள்ளைகள் | - | 351 592 |
| ஆசிரியர்கள் | - | 21 187 |

- சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி 95 நாடுகளில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. பல நாடுகளில் அரசாங்க ஆதரவும் உண்டு.
- சத்திய சாயி பாடசாலைகள்
  27 நாடுகளில் இயங்குகின்றன.
  இந்தியாவில் மட்டும் 84.
- சத்திய சாயி கல்வி நிறுவனம் (Institute of Sathya Sai Education)

  25 நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.
- சத்திய சாயி உயர் கல்வி நிறுவனங்கள்

பல்கலைக்கழகங்களுடன் இணைந்த கல்லூ ரிகள் - 3 இந்தியாவிலுள்ளது.

பல்கலைக்கழகம் - 2, 3 வளாகம் - இந்தியாவி லுள்ளன.

இந்தியாவில் இயங்கும் பல்கலைக்கழகம் இந்தியா விலேயே முதன்மையான தென்று அரசாங்கமே தனது மதிப்பீட்டில் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மானிப்பாயில் சத்தியசாயி பாடசாலை யொன்று இயங்கி வருகின்றது.

கடந்த 30 வருடமாக இயங்கி வரும் இக் கல்வி முறை எவ்வாறு சமூகப் பொருளாதார, பாதுகாப்பு என்பதை விருத்தி செய்துள்ளது என்று பல மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் நற்பயனை பலநாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

நடைமுறையிலிருக்கும் கல்வி முறையில் மனித மேம்பாடுகள் இணைக்கப்பட வேண்டுமென்பதில் வேறு கருத்தில்லை. இதைச் செயற்படுத்துவதில் ஆர்வமில்லை. ஏனெனில் மேற்படிப்புக்கோ அல்லது தொழிலுக்கோ தெரிவு செய்யப்படும் போது இதற்கு ஒரு முக்கியத்துவம் இல்லை. தொழிலை மையமாக வைத்து, பரீட்சைச் சித்தியை ஒரே நோக்காகக் கொண்டுள்ள கல்வி முறையில் மனித மேம்பாடுகள் உதாசீனம் செய்யப்படுகின்றன. என்றைக்கு உயர் கல்விக்கும் தொழில் தேர்விலும் மனித மேம்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அன்று தான் கல்வி முறையில் பாரிய மாற்றம் ஏற்படும்

" கல்வியின் நிறைவு ஒழுக்கம்" - சத்திய சாயி பாபா

"மெய்ப் பொருள் காண்பதறிவு" - யாழ் பல்கலைக்கழக மகுடவாக்கியம்.

" கற்கக் கசடறக் கற்றவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக" - திருவள்ளுவர்.

பகவானின் மாணவர்கள் அநேகர் படிப்பு முடிந்தபின் உயர் தொழில் புரிகின்றார்கள். வணிக, உயர்கல்வி, தொழில் நிதி நிலையங்களில் வேலை செய்கின்றார்கள். அவர்கள் வாழ்விலும், தொழிலிலும் மனித மேம்பாடுகளை இணைத்து இரண்டையும் உன்னதமாக மேம்பாடடையச் செய்துள்ளார்கள்.

ஜெய்சாயிராம்

*- ஆசிரியர்*

உசாத்துணை நூல்:

Global over view of Sri Sathya Sai Education (2007) by: Sri Sathya Sai World Foundation.



கற்கை வகுப்பு என்றால் வெறுமனே நூல்களை வாசிப்பது மட்டுமன்று கற்கை வகுப்பு என்பது குறிப்பிட்ட ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு நபரும் தாம் அவ்விடயம் பற்றி விளங்கிக் கொண்ட கருத்தை ஒரு வட்ட மேசை மாநாடு போல கலந்துரையாடுதலாகும். ஒவ்வொருவரும் அவ்விடயம் பற்றிய கருத்தை வெளியிடுவதால் இறுதியில் இதிலிருந்து விழுமியக் கருத்துக்கள் பெறப்படும். வெறுமனே வாசிப்பு இடம் பெற்றால் சந்தேகங்கள் ஏற்படும். ஆனால் ஒவ்வொருவரும் தமது கருத்தை வெளியிடும் போது சந்தேகங்களுக்கு விடை கிடைத்துவிடும். தலைப்பானது ஆராயப்படும். கற்கை வகுப்பு அதைப் பல்வேறு கோணங்களில் நோக்கும். இது பல்வேறு முகங்களையுடைய வைரம் போன்றதாகும். ஆனால் ஒரு முகம் அதாவது மேற்புறம் தட்டையானது, இதிலிருந்து எல்லாவற்றையும் நோக்கலாம். மேலான கருத்தைக் கண்டுபிடிப்பதே கற்கை வகுப்பின் பணியாகும்.

- பாபாவுடன் ஹிஸ்லப்பின் உரையாடல் - 1968

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சத்திய சாயி கல்வி முறையில் ஆசிரியரின் பங்கு



இக் கல்வி முறையில் ஆசிரியரை மையமாக எடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் எப்படியோ அப்படியே பிள்ளையும் வளருவானென்ற தத்துவத்திலே இயங்குகிறது. இக் கல்வி முறையில் ஆசிரியரின் உள வளர்ச்சி, சிந்தனை, சொல், செயல்கள் அனைத்தும் ஆன்மீக அடிப்படையிலேயே அமைய வேண்டும். ஆகவே ஆசிரியர் ஆன்மீக ஈடுபாட்டில் ஆர்வமாக இருக்க வேண்டும். அத்துடன் அறிவுத்திறன், செயற்திறன், கற்பிக்கும் திறனும் உடையவராய் இருத்தல் வேண்டும். அதாவது பிரார்த்தனை, தியானம் இடைவிடாத நாமஸ்மரணை செய்பவராகவும், கடமையுணர்வு, அர்ப்பணிப்பு, கட்டுப்பாடு, பகுத்தறிவு, மனஉறுதி உள்ளவராகவும் இருக்க வேண்டும். இப்படியாகத் தன்னை அர்ப்பணிப்பவரிடத்தில் காமம், குரோதம்,லோபம், மோக, மதம், பேராசை, பொறாமை ஆகிய உள் எதிரிகள் வெளியேற்றப்பட்டு சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை (அன்பு), அஹிம்சை ஆகிய உயர் மனித மேம்பாடுகளால் உள்ளம் நிறைவு பெறும். அவரின் சிந்தனை, சொல், செயல் உணர்வில் தூய்மையும், ஒருமையும் ஏற்படும். இதனால் தெய்வீகத் தன்மை வெளிப்பட்டு, அவரைச் சுற்றித் தூய்மையான மின்காந்த அன்பு அதிர்வுகள் (Aura) விரிவடையும். தாமே ஒரு முன்மாதிரியாகப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் திகழ்வார்கள். இப்படியானவரால் பிள்ளைகள் கவரப்படுவார்கள். குழப்பமடைந்த பிள்ளை இவரை அணுகியதும் சாந்தமாகி விடும். மகிழ்ச்சியடையும். பிள்ளையின் தாயன்பிலும் பார்க்க இவரின் அன்பு பன்மடங்கு கூடியதாயிருக்கும். பிள்ளைகளுக்குத், தண்டணை, கட்டுப்பாடுகள் அனைத்தும் அன்பின் அடிப்படையிலேயே செயற்படுத்த வேண்டும். பாட இணைச் செயற்பாடுகளிலும் பொறாமை ஏற்படா வண்ணம், போட்டிகளை நடாத்த வேண்டும். அதாவது பங்கு பற்றிய சகல மாணவர்களுக்கும் பரிசில்களும் ஊக்கமும் கொடுத்தல் வேண்டும்.

ஆசிரியருக்கு மாணவருடைய குடும்பச் சூழ்நிலை நன்றாகத் தெரிய வேண்டும். பெற்றோர்களுடன் கருத்துப் பரிமாறல் நடத்த வேண்டும். பிள்ளையின் நல்ல குணாதிசயங்களை வெளிப் படையாகவும்,தகாத நடவடிக்கைகளை மிகவும் இரகசியமாகவும் பெற்றோர்களிடம் சொல்ல வேண்டும்.

கேர்பெற் ஸ்பென்சர் (Herbert Spencer) ஆசிரியருக்கு கற்பித்தலுக்குப் பொதுவான வழி காட்டிகள் என்று கூறியவை:

- தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றிற்குச் செல்லல் (From the known to the unknown)
- காட்சிப் பொருட்களிலிருந்து கருத்துப் பொருட்களுக்குச் செல்ல வேண்டும். (From concrete to the abstract)
- சுலபமானதிலிருந்து கடினமானதிற்குச் செல்ல வேண்டும். (From easy to the difficult)
- எளியதனின்று கடினமானதிற்குச் செல்ல வேண்டும். (From simple to complex)
- திட்டமற்றதனின்று திட்டமானதற்குச் செல்ல வேண்டும் (From indefinite to definite)

இயற்கை விளைவுகளின் (Natural consequences) துணை கொண்டு குழந்தைகளுக்கு ஒழுக்கப்பயிற்சி அளிக்க வேண்டும்."

மூன்று விதமான ஆசிரியர்கள் உள்ளனர். அவையாவன.

1) குறைகூறும் ஆசிரியர்
2) விளங்கப்படுத்தும் ஆசிரியர்
3) உயிர்ப்பூட்டும் (Inspiration) ஆசிரியர்.

மூன்றாவதான ஆசிரியராக இருக்க வேண்டும்.

**பகவான் ஆசிரியர் ஆசிரியத் தொழிலைப் பற்றிய கூற்றுக்களாவன:**

பிள்ளைகளுக்குக் கற்பிப்பது ஓர் உயர் உன்னதமான தொழில். பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் போது நீங்களே உங்களைக் கற்பிப்பது போன்ற உணர்வு ஏற்பட வேண்டும். ஒரு மாணவன் வழி தவறினால் ஒருவனுக்கே பாதிப்பு. ஆசிரியர் ஒருவர் வழி தவறினால் பல மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். இத் தொழிலை ஓர் உன்னத ஆன்மீகச் சாதனையென்று எடுத்துக் கொண்டு முத்தி நிலையை அடைய வேண்டும். குரு இருளை அகற்றி ஞான ஒளி ஏற்றுபவரேயாவார். மாணவர் தவறு செய்தால் சபிக்கக் கூடாது, பதிலாக ஆசீர்வதிக்க வேண்டும். செந்தழிப்பான முகத்துடன் மாணவரிடையே செயற்பட வேண்டும். ஆசிரியரின் நற்குணங்களே மாணவர்களில் பிரதி பலிக்க வேண்டும். பாடசாலையில் மாத்திரம் ஆசிரியரல்ல, மானிடத்திற்கே ஆசிரியராகிறீர்கள். பிள்ளைகளைப் பெயர் சொல்லி அழைக்க வேண்டும். பிள்ளைகளை எந்நேரமும் ஏதோ செயலில் எப்போதும் ஈடுபடுத்த வேண்டும். வாளாவிருக்க விடக்கூடாது. மாணவர்கள் தங்களுக்குச் சுதந்திரம் இல்லையா என்று கேட்கலாம். அவர்களுக்குச் சுதந்திரம் என்றால் முழுமையான புலனடக்கமே என்று விளக்க வேண்டும். இதில் பெற்றோர்களுக்கும் பெரும் பங்குண்டு. சட்டம், ஒழுக்க விதிகளைக் கடைப்பிடிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும். தவறினால் பொருத்தமான தண்டனை கொடுக்கப் பின்னடிக்கக் கூடாது. அன்பும் கட்டுப் பாடும் ஒருங்கேயிருக்க வேண்டும். ஆசிரியரைத் தண்ணீர்த் தாங்கி என்றால், பிள்ளைகள் நீர் வெளியேறும் பைப்புக்களாவர். மாணவனுடன் ஏற்படும் உறவு, தாய்ப்பசுவுக்கும் கன்றுக்குமுள்ள தொடர்பு போலிருக்க வேண்டும்.

ஆசிரியர் பகவானின் போதனையின்படி வாழ வேண்டும். இவர்களினாலே மாணவரும் ஆசிரியரிடமிருந்து போதனைகளை உள்வாங்கி வாழ்வார்கள். வாயால் சொல்லி ஒருவரையும் மாற்ற முடியாது. இதயமயமான செயல்களாலும் முன்மாதிரியாலுமே மாற்றத்தைத் துரிதப்படுத்தலாம். ஆசிரியர் ஒவ்வொரு சொல்லையும், செயலையும், உணர்வுகளையும் மிகவும் அவதானமாக வெளிப்படுத்த வேண்டும். ஆசிரியத் தொழிலில் பெண்கள் ஆண்களைவிட திறமை உள்ள வர்கள். பொறுப்புணர்ச்சி கூடியவர்களும் பெண்களேயாவர். ஆசிரியர்கள் ஆத்ம விசாரணையிலீடுபட வேண்டும். மணிக்கூடுபார்த்து வேலை வெய்பவர்களாக இருக்கக் கூடாது. தேவைப்படின் கூடிய நேரம் நின்று கற்பிக்க வேண்டும். **யார் இலக்கண மானவனென்றால் ஆசிரியர் தான்**. இப்படியான இலக்கண ஆசிரியரை மாணவர் பின்பற்றுவார்கள். சாதாரண ஆசிரியர் தான் படித்ததைச் சம்பளத்திற்காக சொல்லிக் கொடுப்பவர். குரு என்றால் மாணவனின் இதயத்திலமர்ந்து அதை விரிவாக்கி தெய்வீகத்தை உணர வைப்பவர். ஆசிரியரும் மாணவரும் அரசியலில் ஈடுபடக்கூடாது. மாணவரில் ஆத்மீக நோக்கத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும். ஆன்மீக வெற்றிக்கு புத்தரின் இதயமும், ஜனக அரசரின் கைகளும், ஆதி சங்கராச்சாரியாரின் தலையும் வேண்டும். மாணவர்கள் தமது பெற்றோரைத் தெய்வமாக மதித்து வணங்கப் பழக வேண்டும். ஒவ்வொரு பாடமும், கணிதமாயிருந்தாலும் மேம்பாடுகள் இணைக்கப்பட்டு கற்பிக்கப்பட வேண்டும். தாய் குழந்தையைத் தூக்குவதற்கு எவ்வளவு குனிகிறாளோ அதே மாதிரி ஆசிரியரும் மாணவனின் நிலைக்குக் குனிந்து உணர்த்த வேண்டும்.

**கற்பித்தல் செயற்பாட்டின் உன்னத விளைவு என்னவென்றால்:**

- கற்பவரின் விழிப்பு நிலை உயர்தல்
- பயபக்தியுடன் படைப்பையும் படைத்த வனையும் நோக்கும் தன்மை தீவிரப் படுதல்.
- தானும் மற்றவையெல்லாம் ஒன்றே என்ற மனப்பாங்கு ஏற்படுதல் என்பவையாகும்.

பாடசாலை தொடங்கும் போது பிரார்த்தனையுடன் தொடங்கி முடியும் போது மௌனத்தில் ஒரு அல்லது இரு நிமிடங்கள் இருந்து வீடு செல்ல வேண்டும். பாடசாலையில் பிரார்த்தனை, அமைதி இருக்கை, சமநிலை மனப்பாங்கு நிகழ வேண்டும். சமூக சேவையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

அடிப்படைத் தேவைகளைப் (உணவு, உடை, உறைவிடம், ஆரோக்கியம், ஆன்மீகம்) பூர்த்தி செய்வதுடன் திருப்தி அடைய வேண்டும். மிகுதி

நேரம், எஞ்சிய வளங்கள் யாவும் மானிட சேவைக்கு அர்ப்பணிக்க வேண்டும். எமது கல்வி சம்பாதிப்பு ஆகியவை சமூகத்துடன் பகிரப்பட வேண்டும். சுதந்திரம், அடிப்படை உரிமை, பொறுப்பு, கடமை இந்த நான்கும் இறுகிப் பிணைந்துள்ளன. இந் நான்கையும் இணைப்பது தெய்வீக அன்பேயாகும். பிள்ளைகளுக்குக் கல்வி இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளிடமிருந்து பணம் வசூலிப்பது தர்மமல்ல. அரசாங்கமோ அல்லது சேவை நிறுவனங்களோ பொறுப்பேற்க வேண்டும். என்னையே மனதில் வைத்து எனக்கே வேலையை அர்ப்பணித்து, பலனையும் எனக்கே விடுத்தால் நான் சகலதையும் கவனித்துக் கொள்வேன்.

ஜெய் சாயிராம்

Sathya Sai Speaks on Education என்ற நூலிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது - (ஆர்)



இளைஞர் என்பது வயதைப் பொறுத்து நிர்ணயிப்பதா? குருஷேத்திரப் போரின் போது மஹாவீரராகவும், தீரனாகவும் திகழ்ந்த பீஷ்மர் இளைஞரா? அர்ஜுனன் இளைஞனா? கலியுக அளவுகோலில் பார்த்தால் அவர்கள் அனைவரும் கிழவர்களே, அன்று கிருஷ்ணபகவானை இன்று சத்திய சாயி பரமாத்மாவை மிஞ்சிய நித்ய இளைஞர் எவராவது இருக்கிறார்களா? அவர்களிடமுள்ள நிர்மலமான பிரேமை, சுயநலமற்ற சேவை மனப்பான்மை, இணையற்ற தியாகம், உற்சாகம் மற்றும் ஆனந்தம் வேறு எவரிடமாவது இருக்கிறதா? இங்கு நாம் கவனிக்க வேண்டுவது என்னவென்றால் இளமை என்பது வெறும் வயதைப் பொறுத்ததல்ல. இராமரையோ கிருஷ்ணரையோ நாம் வயோதிகர்களாகப் பாவிப்பது இல்லை. அதனால் அவர்கள் வயதானவர்கள் அல்ல. என்றாகிவிடுமா? தவறாமல் வயோதிகம் வந்தே இருக்கும். அது தேக தர்மம். ஆனால் அவர்கள் தேகரீதியாக வயோதிகர்களே ஆனாலும் மன மற்றும் ஆத்மரீதியாக நித்திய யுவர்களே. எனவே இளைஞர்கள் எதைக் கவனிக்க வேண்டுமென்றால் தம்மிடம் இருக்க வேண்டிய உற்சாகம், புத்திக்கூர்மை, இந்திரியக் கட்டுப்பாடு, மனக்கட்டுப்பாடு இருக்கிறதா இல்லையா என்பது தான். இவை இல்லாதவர்கள் 18-40 வயதிற்குட்பட்டவர்களாயினும் இளைஞர்கள் இல்லை.

சனாதன சாரதி 2007- பக் 29

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சத்திய சாயி பாடசாலை மானிப்பாய்



ஒரு வகையில் நோக்கும் பொழுது மனிதர்களுக்கு உள்ள அனைத்துப் பிரச்சனைகளின் சாராம்சத்தையும் இரு பெரும் வகுதிகளுக்குள் அடக்கி விடலாம். முதலாவது வகுதி என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாதிருத்தல். இரண்டாவது எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அறியாதிருத்தல். எனினும் பகவானோ எமக்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அனைத்து விடயங்களிலும் தெளிவாக்கியிருக்கிறார்.

இன்றைய கல்வி முறையின் போதாமை குறித்துப் பலரும் பல கருத்துக்களை கூறியிருக்கின்றனர். அவையனைத்தையும் பிழிசாறாக **"கல்வி புற உலகு குறித்த தகவல்களைத் திரட்டி வழங்கும் கலையாக இன்று குறுகிவிட்டது. மனிதரில் தெய்வீகத்தை மலரச் செய்யும் முக்கிய பாகம் இன்று கைவிடப்பட்டு விட்டது."** என இரண்டே வசனங்களில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள் விளக்கியிருக்கிறார்.

அத்துடன் நின்று விடாது "கல்வி அடிப்படை மனித விழுமியங்களை மனதில் பதிய வைப்பதாக இருக்க வேண்டும். அது இப் பிரபஞ்சம், ஒட்டு மொத்த மனித குலம் என்பவற்றை உள்ளடக்கிய பார்வையை வழங்க வேண்டும். மற்றவர்களின் மகிழ்ச்சிக்குப் பங்கமில்லாது மகிழ்வாக வாழும் வல்லமையை வழங்க வேண்டும். எவ்வித முன்னாய்வுகளுமின்றி சகல விடயங்களையும், மகிழ்ச்சி தருபவற்றையும், பொருளுடைமை யையும் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றலை வழங்க வேண்டும். மிகவுயர்ந்த ஆத்ம ரீதியான வெற்றியை அடையும் இலட்சியத்தில் கவனக் குவிப்பை ஏற்படுத்த வல்லதாகவும் கல்வி அமைய வேண்டும்" என ஓர் சிறந்த கல்வி முறைமை என்ன செய்ய வேண்டும் எனவும் பகவான் விரிவாக விளக்கியுள்ளார்.

பகவான் காட்டிய திசைவழியில் மனித மேம்பாட்டிற்கான கல்வியைக் கற்கும் பொழுது "கற்றதனாலாய பயன்கள்" பின்வருமாறு அமையும் என சத்திய சாயி கல்வியியலாளர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

1. நல்லனவற்றையும் அவையல்லாதனவற் றையும் வேறு பிரித்தறியும் ஆற்றல்.
2. சமூக அல்லது அற நியமங்களை கைக்கொள்ளும் பொழுது ஏற்படக் கூடிய இக்கட்டுக்களையும், தர்மசங்கடங்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல்.
3. ஆக்ரோஷமானதும், சமூகப் பொருத்தப் பாடற்றதுமான நடத்தைகள் தனி மனிதரிலும், சமூகத்திலும் ஏற்படுத்தும் விளைவுகளைப் புரிந்து கொண்டு அவற்றைத் தவிர்த்து நடக்கும் ஆற்றல்.
4. முரண்பாடுகளை நியாயமான முறையில் தீர்த்து வைக்கும் ஆற்றல்.
5. தனிமனிதன் - சமூகம் - தொழில்நுட்பம் இயற்கை என்பவற்றிற்கிடையிலான இடைத் தொடர்புகளை புரிந்து கொண்டு பூகோளச் சமநிலையைப் பேணுவதில் தனி மனிதருக் குரிய பொறுப்புக்களைப் புரிந்து கொண்டு நடக்கும் ஆற்றல்.

இவையனைத்தும் கைவரப் பெற்ற மாணவர் களையே மனித மேம்பாட்டுக் கல்வி உருவாக்கும் என்கின்றனர் சத்திய சாயி கல்வியியலாளர்கள்.

இவ்வுயர் இலட்சிய ஆற்றல்களை எவ்வாறு அடைவது? எவ்வாறு இவற்றை சாத்தியமாக்குவது? என்பதை குறித்து வழி முறைகளும் பகவானால் தெளிவாக உருவாக்கப்பட்டுள்ளன. மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம், ஐந்து மனித

விழுமியங்கள், ஐந்து வகையான கற்பித்தல் வழிமுறைகள் என்பவை பகவானால் தெளிவாக வரையறுக்கப்பட்டு எமக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறாக பகவானின் அருட்கடாட்சத்தினால் என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும் என்ற பூரண தெளிவுடன் மாணவர்களுக்கான முறைசார் கல்வியை வழங்கும் நிறுவனங்களாக உலகெங்கனும் 26 நாடுகளில், 42 சத்திய சாயி மனித மேம்பாட்டுப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

அவற்றுள் ஒன்று எமது மண்ணில், எமக்கு மிக அருகாமையில் மானிப்பாய் நகரில் இயங்கி வருகின்றது. 2002 ஆம் ஆண்டு பகவானின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை கடந்த ஏழு வருடங்களாக பகவானின் அனுக்கிரகத்தினால் எமது மாணவர்களுக்கு தெய்வீகப் பணி புரிந்து வருகின்றது. தரம் ஒன்று முதல் தரம் ஏழு வரையான வகுப்புக்களில் தற்பொழுது 158 மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகின்றனர். முழு நேர, பகுதி நேர ஆசிரியர்களாக ஏறத்தாழ 16 ஆசிரியர்கள் இங்கு கற்பித்தற் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அரச பாடவிதானத்துடன் மனித மேம்பாட்டுக் கல்வியும் ஒருங்கிணைந்த வகையில் இங்கு கற்பிக்கப்படுகின்றது,

பண்பு விருத்தியில் மாத்திரமின்றி, கல்வி சார் செயற்பாடுகளிலும், புறக் கிருத்தியச் செயற்பாடுகளிலும் உன்னதமான அடைவு களை இப் பாடசாலை மாணவர்கள் வெளிப்படுத்தி யுள்ளனர். அண்மையில் நடந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் முதன்மை மாணவனாக இப் பாடசாலை மாணவனே சித்தியடைந்துள்ளார். இதனை விட வட இலங்கை சைவ பரிபாலன சபையினரால் நடாத்தப்படும் சமயப் பாடப் பரீட்சையிலும் இப் பாடசாலை மாணவரொருவர் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இனிவரும் நூற்றாண்டுகளுக்கான கல்வி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாகத் திகழவுள்ள இப்பாடசாலைக்குச் சாயி அடியார்கள் செய்ய வேண்டியவை ஏராளம். உடலுதவி, அறிவுதவி, பொருளுதவி எனப் பல்வேறு வழிகளில் நாம் எமது பங்களிப்பை வழங்கலாம். தெய்வ கைங்கரியத்தில் எம்மையும் ஓர் கருவியாக்குவோம்.

ஜெய் சாயிராம்

முகவரி: சத்திய சாயி பாடசாலை,
சோதி வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய், ஸ்ரீலங்கா

தொலைபேசி : 0213214298
மின்னஞ்சல் : saischoolmail@yahoo.com
கணக்கு இல : 51037012
Hatton National Bank
Manipay.

*தொகுப்பு:*
*திரு. எஸ். சுந்தரேஸ்வரன்*
*யாழ்ப்பாணம்.*



" ஒருவனுக்கு மீன் துண்டைக் கொடுத்தால் ஒரு வேளை உணவு தான். மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்தால் வாழ்நாள் முழுவதும் உண்பான்.
ஒரு வருடத்திட்டம் என்றால் விதை விதைக்கவும்

பத்து வருடத் திட்டம் என்றால் மரத்தை நடவும்
நூறு வருடத்திட்டம் என்றால் மக்களுக்கு கல்வி புகட்டவும்.
விதை விதைப்பதால் ஒருமுறைதான் அறுவடை

மரம் நடுவதால், பத்து மடங்கு அறுவடை
கல்வி புகட்டுவதால் அறுவடை நூறுமடங்காகிறது"

- குர்ஆன். இசு. கி.மு3 - Kuan Izu 3 B.C

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயியின் மார்க்கத்தின் பரிணாமம்



1940 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் திகதி தனது அவதார நோக்கைப் பிரகடனம் செய்து. பக்தனுக்காக வீட்டை விட்டு வெளியேறினார். தனது முதல் பஜனையின் மூலம் (மானச பஜரே குரு சரணம்) குருவின் பாதத்தில் சரணடைவதை உபதேசித்தார்.

ஆசிரியரின் மேல் மதிப்பில்லாத கல்வி, உலகவியலையே நோக்காகக் கொண்ட கல்வி, கொந்தளிக்கும் கடலிலே சுக்கான் இல்லாத படகில் பயணம் செல்வதை ஒத்ததாகும். எங்கு போய்ச் சேர வேண்டுமென்பதையே அறியாத பயணமாகும்.

பின்பு மனித மேம்பாடுகளை நாளாந்த வாழ்வில் இணைக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். மேலும் கல்வி ஒருவரின் விழிப்புணர்வு நிலையை உயர்த்தி உலகில் தர்மத்தை நிலை நாட்ட வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறிச் செயற்பட்டார்.

1947 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி தனது தமையனாருக்கு எழுதிய கடிதத்தில் அவதார நோக்கைக் குறிப்பிட்டிருந்தார். அதாவது: "எனது பணி மனித இனத்தைப் பாதுகாத்து எல்லோருக்கும் ஆனந்தம் நிறைந்த வாழ்வை அளிப்பதேயாகும். தர்மப் பாதையிலிருந்து விலகி யோரைத் திரும்பவும் தர்மப் பாதையில் நிலை நாட்டுவதே எனது சங்கல்ப்பம்"

1926 தொடங்கி 1947 வரை லீலைகளுடன் போதனைகளிலும் ஈடுபட்டார். 1947 தொடங்கி 1968 வரை போதனைகளுக்கு பலமான அத்திவாரம் போட்டார். இக் காலத்தில் சிறு பிள்ளைகளுக்கு பாலவிகாஷ் கல்வியையும் வித்துவான் மகாசபைகளையும் ஸ்தாபித்தார். இத்துடன் மாதாந்த சஞ்சிகையான சனாதன சாரதியையும் 1957 ஆம் ஆண்டு வெளியிடத் தொடங்கினார். இக் காலகட்டத்தில் பஜனை மண்டலிகள், சத்திய சாயி சேவா நிலையங்கள், இந்தியாவில் தொடங்கி பல நாடுகளிலும் கடுகதி வேகத்தில் பரவின.

1968 ஆம் ஆண்டில் சத்திய சாயி சேவா நிறுவனங்களின் முதலாவது மகாநாடு மும்பாயில் நிகழ்ந்தது. அந்த ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு காலத்தில் சாயி நிறுவனங்கள் உலகளாவிய ரீதியில் பல வகைகளில் வேரூன்றத் தொடங்கின. இக் காலத்தில் ஏற்பட்ட பாரிய கல்வித் திட்ட வளர்ச்சியை இரண்டாகப் பிரித்து நோக்கலாம்.

1968 இல் தொடங்கிய பால விகாஷ் கல்வித் திட்டம் இந்தியாவிலும் வேறு பல நாடுகளிலும் பரவி 1979 இல் சத்திய சாயி கல்வித் திட்டம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டது, கல்விப் பாடத்திட்டம் கற்பிக்கும் முறைகள், உதவுவதற்குக் கைநூல்கள் ஆகியன உருவாகின. கல்வித்திட்டம், கல்லூரிகள், வளாகங்கள், பல்கலைக்கழகங்களை உருவாக்கியது. முதலில் பெண்களின் கல்விக்காக அனந்தப்பூரில் 1968 இல் கல்லூரி நிறுவப்பட்டது, 1969 இல் வைல்பீற்டிலும், 1974 இல் ஜெய்ப்பூர், 1975 போபாவிலும் கல்லூரிகள் நிறுவப்பட்டன. உயர் கல்வி நிறுவனம் புட்டபர்த்தியில் 1981 இல் நிறுவப்பட்டது. சத்திய சாயி பாடசாலைகள் பல இடங்களில் இயங்கத் தொடங்கின. 1979 இல் பாலவிகாஷ் மகாநாடு நிகழ்ந்தது. அதில் சுவாமி பாலவிகாஷ் குருமார் தனதும் தேசத்தினதும் சொத்தென்று பிரகடனம் செய்தார்.

சத்திய சாயி கல்வித் திட்டம் இந்திய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, 1979 இல் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி (EHV) என்ற பெயர் சூட்டப்பட்டது, சுவாமி இத்திட்டத்தின் தத்துவம், கற்பிக்கும் முறை நோக்கு எல்லாம் திட்டவட்டமாகச் சொல்லியுள்ளார்.

சத்திய சாயி பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான பேராசிரியர் கோகக் என்பவர் கல்வியின் இலட்சியங்களையும் ஆளுமை வளர்ச்சியையும், ஐந்து அடிப்படை மனித மேம்பாடுகளையும் பின்வருமாறு இணைத் துள்ளார்.

கல்வியின் ஆளுமையின் வெளிப்படுத்தும்

இலட்சியங்கள் விருத்திப்பகுதி மனித மேம்பாடு

1. அறிவு பகுப்பாய்வுப் புத்தி சத்தியம்
2. செயற்திறன் உடல் தர்மம் (அறம்)
3. சமநிலை உணர்வுகள் சாந்தி
4. தூரநோக்கு உள்ளம் அன்பு (பிரேமைகாட்சி
5. தன்னை அறிதல் ஆன்மீகம் அகிம்சை

பேராசிரியர் கோகக் மேலும் கூறுகிறார். "மனித மேம்பாடுகள் என்று கூறப்பட்டவையே ஆன்மீக நோக்கம், இதன் மூலம் ஆன்மீக சாதகர்கள் தெய்வீகத்தை அடையலாம் என்று சுவாமி கூறியுள்ளார். இவ் அடிப்படை மேம்பாடுகள் தான் சத்திய சாயியின் இணைக்கப்பட்ட கல்வியின் கோட்பாடுமாகும். மாணவர்கள் பூரண ஆளுமை வளர்ச்சியடைவதற்கு உப மேம்பாடுகள் மூலம் அடிப்படை மேம்பாடுகளை வெளிக் கொணர வேண்டும். இது தெய்வீக அன்பு மலர்வதன் மூலமே ஏற்படும்."

1986 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச கல்வி மகாநாட்டில் தாய்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர். ஆற் ஒங் யும்சாய் (Dr.Art Ong Jumsai) இக் கல்வித் திட்டத்திற்கு விஞ்ஞான விளக்கம் கொடுத்தார். இதன் பலனாக இக் கல்விக் கொள்கை மேல் நாடுகளில் பெரும்பாலாக ஏற்கப்பட்டது. இவர் அந்தக்கரணங்களை மனிதத் தொழிலகம் என்று கூறி விளக்கம் கொடுத்தார். இவரின் விளக்கம் விஞ்ஞான ரீதியாக ஏற்கக் கூடியதாக இருந்தது. வெளிப் புலன்களிலிருந்து உள் மனதிற்கு போகும் முறையை முன் வைத்தார். விழிப்புணர்வின் ஏணிப்படி முன்னேற்றம் (Ladder of Consiciousness) என்பதை முன் வைத்தார். அதாவது,

1. உயர் மேல் நிலை கீழ் நிலையினூடாக ஏற்படுவதேயாகும். கீழ் நிலையிலிருந்து எழுவதில்லை.
2. உயர் மேல் நிலை புலன்களுக்கப்பாலுள்ள தென்றாலும் கீழ் நிலையை உன்னத நிலைக்கு மாற்ற வல்லது.
3. திரிபு படுத்தப்பட்ட கீழ் நிலை, மேல் நிலையையும் திரிபு படுத்திவிடும்.

நாம் செயற்படுத்தும் கல்வி முறை மனிதன் என்றால் என்ன என்ற விளக்கத்தில் பெரிதும் தங்கியிருக்கிறது. உதாரணமாக: மனிதன் ஒரு விலங்கு என்று எண்ணினால் பிள்ளைகளின் நடத்தையை உபகாரம், தண்டனை என்பதன் மூலம் ஏற்படுத்தத் தெண்டிப்பார்கள். மனிதன் ஒரு இயந்திரம் என்று எண்ணினால், நாம் விரும்பியபடி செயற்பட இயக்கி வைப்போம். மனிதனை உன்னத மனிதனாக வளர்க்க வேண்டுமாகில், முதலில் மனிதனை விளங்கிக் கொள்ள வேண்டும். 1992, 1993 இல் பகவான் ஆசிரியர்களுக்கு மனித மேம்பாடுகளைப் பற்றியும், சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியைப் பற்றியும் விளக்கம் கொடுத்தார். மனித மேம்பாட்டுக் கல்வி (Education in Human Values , EHV) உண்மையிலேயே 3H. அதாவது தலை, இதயம், கைகள் என்பதேயாகும். தலையில் எண்ணம் எழுந்ததும் இதயத்தில் பரிசோதித்த பின்பே கைகள் மூலம் செயலில் இறங்க வேண்டும்.

2000 ஆம் ஆண்டில் படைப்பைப் பற்றிய பகவான் விளக்கத் தொடங்கினார். பஞ்ச பூதங்கள், எவ்வாறு மனிதன் உள்ளும், புறத்திலும் சேர்ந்திருக்கும் அறிவை பாடத்திட்டத்தில் சேர்த்துள்ளார். இன்று மனிதன் உள்ளும், புறமும் உள்ள பஞ்ச பூதங்களின் சேர்க்கைச் சமநிலையைக் குழப்பிக்கொண்டிருக்கிறான். அளவுக்கு மிஞ்சிய ஆசைகள் சேர்ந்த மனம், தெய்வீக சக்தி அல்லது இடைவிடாத இணைந்த விழிப்புணர்வின் (Constant Integrated Awareness) வெளிப்பாடை மூடி மறைக்கிறது. மனிதன் மனதை ஆளக் கற்றுக் கொள்வதன் மூலமே மேற்கூறிய மறைத்தலை அகற்றலாம்.

இக்காலத்தில் சுவாமி "எஜுகெயர்" அல்லது விழுக்கல்வி என்ற ஒரு ஆழமான விளக்கத்தைக் கொடுக்கத் தொடங்கினார். எஜுகெயர் என்றால் உள்ளிருக்கும் தெய்வீகத்தை வெளிக் கொணர்வதேயாகும். அதாவது தெய்வீகம்,

அடிப்படை மனித மேம்பாடுகளாக எண்ணம், சொல், செயலில் வெளிப்பட வேண்டும். முதற் கட்டமாக, அடி அறி மனதைத் தூய்மையாக்க வேண்டும். பகவான் இதற்காகவே நல்லதைச் செய், நல்லதாயிரு, நல்லதைப் பார், நல்லதைக் கேள் என்ற வழிமுறையைக் காட்டியுள்ளார். நாம் கடைப்பிடிக்கும் மேம்பாடுகள், எமது எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் ஆகிய வற்றில் பிரதிபலிக்கும். இப்படியான ஆனந்தம் நிறைந்த மனத்திருப்தியான வாழ்வை அளிக்கும் கல்வியே உண்மையான கல்வி. கல்வியின் நிறைவு ஒழுக்கம். அனுபவ ரீதியான கற்றலே சுவாமியின் கல்வித் திட்டத்தில் முக்கியமான அம்சம். பிள்ளைகள் கேட்டுத் திருந்த மாட்டார்கள். ஆகவே அவர்களுக்கு உகந்த சூழலை பாடசாலையிலும், வீட்டிலும் நாம் ஏற்படுத்த வேண்டும். கல்வித் திட்டத்தில் ஏற்படுத்தும் திருத்தங்களை விட மனப்பாங்கில் ஏற்படும் மாற்றமே முக்கியமானது. இதற்கு இடைவிடாத விழிப்புணர்வுடன் கூடிய முயற்சியே அவசியம். ஆசிரியர்கள் மனித மேம்பாடுகளின் ஒளிவிளக்காகத் திகழ வேண்டும். சுடர்விடும் விளக்கே மற்றைய விளக்குகளை ஒளிரச் செய்யலாம். தண்ணீர்த் தொட்டியில் இருக்கும் நீரே குழாய்களில் வெளியேறும்.

சத்திய சாயி கல்வித் திட்டம் தெய்வீகமானதும், பரிசோதிக்கப்பட்டதும் சகல மக்களுக்கும் பொருத்தமானதாகும். எமது வாழ்வோ, பனிக்கட்டி உருகுவது போல உருகிக் கொண்டே போகிறது. முடிவதற்கு முன்பு மானிட சேவையிலீடுபட வேண்டும். இக்கல்வித் திட்டம் சகலரையும் சேவை நிறைந்த வாழ்வுக்கே தயார் செய்கிறது.

ஜெய் சாயிராம்

**(சத்திய சாயி கல்வி நிறுவனம் மும்பாயினால் வெளியிடப்பட்ட, உன்னத மனிதம் நூல் ஒன்றில் இருந்து தொகுக்கப்பட்டது.**

**Book - 1 Towards Human Excelence by: Institute of Sathya Sai Education Mumbai)**



**பாடசாலைகளுக்கான தூரநோக்கு:**

*"தேசிய குறிக்கோளுக்கமைய நன்நெறியையும் தேர்ச்சி யையும் மாணவர்களிடம் நிலை பெறுவதற்கு தர விருத்தி ஏற்படுத்தி வரும் பாடசாலையாக விளங்குதல்"*

**பணிக்கூற்று**

*"ஆசிரியர்களின் வாண்மைத் தரத்தை மேம்படுத்தி திட்டமிட்ட கற்பித்தல் உத்திகளுக்கூடாக மாணவர்கள் பூரணத்துவம் பெறக்கூடிய வகையில் அவர்களது கற்றல் தேர்ச்சிகளை மேம்படுத்துவராகவும் கலாச்சார விழுமியங்களை விருத்தி செய்பவராகவும் சமூக உறவை வளர்ப்பவராகவும் விளங்குதல்"*

-ஸ்ரீ லங்கா கல்வி அமைச்சு

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பகவானின் தூர நோக்கிய பார்வை - பாலவிகாஷ் கல்வி



இறைவன் மனித ரூபத்தில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா என்ற நாமத்துடன் எமது மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற நற்செய்தி யாழ் மக்களுக்கு 1966 ஆம் ஆண்டளவில் தான் ஓரளவு பரவலாக எட்டியது. ஆத்மீக வாழ்க்கையில் புரிந்துணர்வும், ஒருமைப்பாடும் உள்ள சில அன்பர்கள் ஒன்றுகூடி 1967 ஆம் ஆண்டில் பகவானின் போதனைகளை அறியவும் அவர் காட்டிய சாதனைகளை அனுஷ்டிப்பதற்கும் ஒரு சமித்தியை ஆரம்பித்தனர்.

1967 ஆம் ஆண்டு ஆனி மாத ஆங்கிலப் பத்திரிகையான "இலஸ்ரேட்டட் வீக்லி" (Illustrated Weekly of India) நடுப்பக்கத்தில் பகவான் பாபாவின் ஒரு பெரிய படம் பிரசுரிக்கப்பட்டு அவரைப்பற்றிய ஒரு கட்டுரையும் வெளியாகி இருந்தது. சுவாமியுடன் முற்பிறவித் தொடர்பு கொண்ட பலருக்கு இக்கட்டுரை ஆன்மீகத்திற்கான ஆரம்பமாக அமைந்தது. யாழ் நகரில் இருந்த பல பெரியார்கள் இக்கட்டுரையால் ஈர்க்கப்பட்டு ஆராய்ந்து கலந்துரையாடி 1967 ஆம் ஆண்டு ஆடிமாத குருபூர்ணையன்று யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அண்மையிலுள்ள டாக்டர். சோமசுந்தரம் அவர்களின் இல்லத்தில் அவருடைய தலைமையில் ஒரு கூட்டம் கூட்டப் பட்டது.

இதில் பங்கு பற்றிய சிலர் வருமாறு: டாக்டர். சோமசுந்தரம், திரு. கே. எஸ். பொன்னுத்துரை, திரு. எஸ். சிவஞானம், திரு. எஸ். கந்தவனம், திரு. எஸ். சண்முகசுந்தரம், டாக்டர். எஸ். இராசரத்தினம், திரு. வி. கே. சபாரட்ணம், திரு. ஆர். சிவசுப்பிரமணியம், திரு. என். சிவசிதம்பரம், டாக்டர். ஆர். பரராஜசிங்கம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்கள் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியை உருவாக்கினர். ஆரம்பத்தில் வீடு களில் இந்த பஜனை ஒரு ஒழுங்கு முறையில் நடைபெற்றது.

1968 இல் புட்டபர்த்தியில் பகவான் பாபாவால் "பாலவிகார்" என்ற கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சிறுவர்களுக்கு ஆன்மீகக் கல்வியை சிறு வயதிலிருந்தே புகட்டுவதன் மூலம் அவர்களை நற்பண்புகளுடைய பொறுப்பான பிரஜைகளை எதிர்காலத்தில் மிளிர வைக்க முடியும் என்ற நீண்டகால திட்டத்தை தூரநோக்குடன் சுவாமி அறிமுகப்படுத்தினார். பின்னர் 1971 இல் இக்கல்வியாவது "பாலவிகாஷ்" என்ற பெயர் மாற்றம் பெற்றது. இக்கல்வி யாழ்ப்பாணத்திலும் அந்நேரத்தில் வீடுகளில் நடாத்தப்பட்டது. இதற்கு பொறுப்பாக திருமதி. நடராசா (நடா அன்ரி) இருந்தார். 1972 ஆம் ஆண்டில் யாழ். சமித்திக்கான காணி அன்பளிப்பாக பெறப்பட்டு கிழக்குப் பகுதியில் ஓர் கொட்டில் அமைத்து அங்கு பஜனை இடம் பெற்றது. அதே இடத்தில் பாலவிகாஷ் வகுப்பும் நடாத்தப்பட்டது,

1968 இல் கொழும்பிலும் 1974 இல் கல்முனையிலும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ் நாட்டி லிருந்து கொண்டுவரப்பட்ட பாடவிதானம் உப யோகப்படுத்தப்பட்டது, பரீட்சைகளும் நடாத்தப் பட்டதாக அறியக் கூடியதாக உள்ளது. 1983 யூலை ஆகஸ்ட் மாதங்களில் புட்டபர்த்தியில் பாலவிகாஷ் குருமாருக்கான பயிற்சி முகாம் நடாத்தப்பட்டது. இப்பயிற்சி முகாமுக்கு திரு. குலவீரசிங்கம், டாக்டர். இரா. சிவஅன்பு, டாக்டர். ஜெகநாதன், திரு. எஸ். முத்துலிங்கம், திரு. எஸ்.சுந்தரலிங்கம், திரு. எஜ். ஞானசேகரம் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆகஸ்ட் மாதப்பயிற்சியில் நாட்டு நிலமை காரணமாக பலர் கலந்து கொள்ளவில்லை. கலந்து கொண்டவர்களுக்கு சுவாமியே சான்றிதழ் வழங்கினார்.

1984 இல் திருகோணமலையில் புட்டபர்த்தியில் பயிற்சி பெற்ற சிலர் ஒரு பயிற்சி முகாம் நடத்தினர். இதில் அமரர். எஸ். ஞானசேகரம் அவர்கள் கலந்து கொண்டார். வடமாகாணத்தில் முதன் முதலாக 1986 இல் ஜனவரியில் தாவடி சமித்தியில் அமரர். எஸ். ஞானசேகரம் ஐயா அவர்கள் தலைமையில் ஒரு குழு பயிற்சி நிகழ்ந்தது. அதில் 88 பேர் பங்கு பற்றினர். 1986 இல் வடபிராந்தியத்திற்கு பாலவிகாஷ் இணைப்பாளராக திரு. ஏ. நடராசா (உரும்பிராயை சேர்ந்தவர்) நியமிக்கப்பட்டார். இவர் 1986 இல் ஏப்ரலில் உரும்பிராயில் ஒரு விரிவான பயிற்சியை அமரர் ஞானசேகரம் ஐயா தலைமையில் நடாத்தினார். ஏப்ரல் 19, 20 திகதிகளிலும் மே 4 ஆம் திகதி யூன் 10 ஆம் திகதியிலும் இப் பயிற்சிகள் நடைபெற்று சான்றிதழ் வழங்கப்பட்டது. இதில் 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து எல்லா நிலையங்களிலும் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத் தப்பட்டு பல நிலையங்கள் வகுப்புக்களைத் தொடங்கினார். திரு. ஏ. நடராசா அவர்கள் காலத்தில் அமரர் திரு. எஸ்.ஞானசேகரம் ஐயாவின் பொறுப்பில் ஒரு பெரிய கண்காட்சி நடத்தப்பட்டது. இது யாழ்ப்பாண நிலையத்தில் நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். எல்லா நிலையங்களும் சேர்ந்து ஒரு கலை விழாவும் நடாத்தினர் அதிலும் பல நாடகங்கள் இடம் பெற்றன.

திரு. நடராசா அவர்களின் பின் 1988 அளவில் சித்தங்கேணியை சேர்ந்த திருமதி. பி. தனசிங்கம் அவர்கள் வடபிராந்திய கல்வி இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் காலத்தில் 1989 இல் குரு பயிற்சி முகாம் ஒன்று நடாத்தப்பட்டது குருமாருக்கான வழிகாட்டல் பிரசுரங்களும் தயாரித்துக் கொடுத்தார். கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது. முக்கிய பாடவிதானமாக 1983 இல் திருமதி. எஸ். சுந்தரலிங்கம் தேசிய பால விகாஷ் இணைப்பாளரால் தயாரிக்கப்பட்டதே பாவனைக்கு உபயோகப்படுத்தப்பட்டது. இப் பாடவிதானம் எமது பிரதேசத்தில் ஏற்ற முறையிலும் அமைக்கப் பட்டிருந்தது.

1987 ஏப்ரல் மாதத்தில் சென்னை சுந்தரத்தில் ஒரு .E.H.V பயிற்சி முகாம் 5 நாட்கள் நடாத்தப்பட்டது. வடமாகாணததிலிருந்து திருமதி. இரவீந்திரன், திருமதி. ம. சரவணபவன், செல்வி. ஜனனி இராசரத்தினம் ஆகிய மூவர் கலந்து கொண்டனர். திருமதி. ம. சரவணபவன் செல்வி இறாகினி, கொழும்பிலிருந்து திருமதி. மகேந்திரன் ஆகியோர் பயிற்சியின் 4 ஆம் நாளே கலந்து கொண்டனர். ஆனாலும் பயிற்சி குழுவினரும் பயிற்சியில் கலந்து கொண்டவர்களும் பயிற்சி முடிவடைந்ததும் "வைற்பீல்ட்" சென்று சுவாமியை தரிசித்து ஆசீர்வாதம் பெற்று திரும்பினர். பயிற்சிப் பொறுப்பாளரும் தமிழ்நாடு பாலவிகாஷ் இணைப்பாளருமான லீலா அம்மையார் அவர்கள் சுவாமியிடம் உத்தரவு பெற்று வந்து பயிற்சி கொடுத்தார். அம்மையாருடன் தங்கியிருந்து குருகுல பயிற்சி பெறும் சந்தர்ப்பம் இவர்களுக்கு கிட்டியது. இதில் திருமதி. எஸ். இரவீந்திரன், திருமதி. எஸ். மகேந்திரன், திருமதி. ம. சரவண பவன், செல்வி. இறாகினி கலந்து கொண்டனர்.

திருமதி. இரவீந்திரன் அவர்கள் திருமதி. தனசிங்கத்தின் பின் இணைப்பாளராக பதவி ஏற்றார். 1992 இல் குருமாருக்கான பயிற்சி முகாம் நடாத்தினார். குருமாருக்கான பிரசுரங்கள் வெளியிட்டதுடன் பிரிவு 2 இற்கான பரீட்சையையும் நடாத்தினர். இதில் எல்லா நிலையங்களும் கலந்து கொண்டன. 1992 இல் இருந்து தொடர்ந்து பலபயிற்சிகளை நடாத்தினர். பரீட்சையையும் ஒழுங்காக நடாத்தி வந்தார்.

1985 இல் இருந்து வடபகுதி பாலவிகாஷ் மாணவர்கள் தேசிய ரீதியான பாலவிகாஷ் பரீட்சையில் கலந்து கொண்டு வந்தார்கள். பிரிவு 3 இற்கான பரீட்சை தேசிய ரீதியிலேயே நடைபெற்றது.

திருமதி. எஸ். இரவீந்திரன் காலத்தில் நடமாடும் கண்காட்சி ஒன்றையும் உருவாக்கினார். இக்கண்காட்சி பாடசாலைகளில் நடாத்தப்பட்டது. பாலவிகாஷ் மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சு, பஜனை போட்டிகளை நடாத்தினர். வினாடி வினா, சுலோகம் ஓதுதல் போன்றவையும் இதில் இடம் பெற்றன. மாணவர்களுடைய வரவு அதிகரிக்கவும் குருமாருக்கு ஊக்கமளிக்கவும் இது ஒரு நிகழ்ச்சியாக இருந்தது. புதிய பாடத்திற்கமைய பிரிவு 1 மாணவர்களுக்கான பாடவிதானம் புத்தக வடிவில் வெளியிட்டார். இவர் 1994 ஆம் ஆண்டின் இறுதியில் கொழும்புக்கு சென்றதனால்

திருமதி. ம. சரவணபவன் தற்காலிகமாக பதவி ஏற்றார். 1996 இல் இவர் நிரந்தரமாகக்கப்பட்டார். பிரிவு 1, 2 களுக்கான பாலவிகாஷ் பரீட்சைகள் தொடர்ந்து நடாத்தப்பட்டன. 1996 இல் இருந்து 2004 வரை ஒவ்வொரு வருடமும் குரு பயிற்சி முகாம் நடாத்தப்பட்டது. 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் இரண்டாவது வார இறுதியில் பாலவிகாஷ் சிறுவர் தினம் அகில இலங்கை ரீதியாக கொண்டாட வேண்டுமென மத்திய சபை தீர்மானித்ததற்கிணங்க வடபிராந்தியத்தில் உள்ள எல்லா நிலைய பாலவிகாஷ் மாணவர்களும் இணைந்து ஒரு முழுநாள் விழாவாக கொண்டாடப்பட்டது. 1995 - 2004 வரை வருடாந்தம் இத்தினம் ஒரு பொது விழாவாக கொண்டாடப்பட்டது.

பிரிவு 3 பரீட்சை சித்தியெத்திய மாணவர்கள் க.பொ.த உயர்தரம் படிப்பதற்கான உதவிப் பணம் தகுதி அடிப்படையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான நிதி திருமதி. எஸ். இரவீந்திரன் காலத்திலேயே சேகரிக்கப்பட்டது. 1995 இல் ரூபா 1600000.00 வங்கியில் வைப்பில் இடப்பட்டது. 1996 இல் இருந்து 2005 வரை இது வழங்கப்பட்டுள்ளது. வங்கியில் வைப்பில் தற்போது ரூபா 100000.00 உள்ளது. நடமாடும் கண்காட்சியும் எல்லா இடங்களிலும் நடாத்தப்பட்டது. தொடர்ந்து 2005 ஆண்டில் செல்வி. இ. இந்திரா அவர்கள் பாலவிகாஷ் இணைப்பாளராக பதவி ஏற்று 2005 பரீட்சை நடத்தினார். 2006 இல் திருமதி. ம. இராசரத்தினம் அவர்கள் பொறுப்பேற்றார். பாலவிகாஷ் குருமாருக்கு புத்தாக்க வகுப்பு நடாத்தினார். குருமாருக்கு ஒரே மாதிரியான சேலை வழங்குவது தொடர்பாக ஊக்கமெடுத்து அதையும் நடைமுறைப்படுத்தினார். இவர்கள் காலத்தில் மானிப்பாயில் ம. மே. கல்வி கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது. 2008 வரை இவர் சேவை ஆற்றியதும் செல்வி மாணிக்கம் அவர்கள் 2008 இல் பதவி ஏற்றார். இப்போ இவர் இணைப்பாளராக கடமையாற்றி வருகிறார்.

பகவான் 1968 இல் அறிமுகப் படுத்திய இந்த பாலவிகாஷ் கல்வி முறையானது 1970 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை நடைபெற்று வருகிறது. எதிர்காலத்தில் நிலையங்களைப் பொறுப்பேற்று நடாத்தக்கூடிய இளைஞர்களை உருவாக்குவதே நல்ல ஆன்மீக அடிப்படை விளக்கம் கொண்ட பிரஜைகளையும் உருவாக்குவதே தூரநோக்காக இருக்கின்றது. அத்தோடு நல்ல ஆன்மீக நாட்டமும், ஈடுபாடும் கொண்ட தலைவர்களையும் உருவாக்க இந்த வகுப்புக்கள் உதவுகின்றன. வடபிராந்தியத்தில் இவ்வகுப்புக்கள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற எல்லோரும் ஒன்றிணைந்து ஊக்கத்துடன் செயல்படுவோம்.

ஜெய் சாயிராம்

*திருமதி. ம. சரவணபவன்*
*தாவடி*



**புதுத்துணி - பழைய துணி**

" குழந்தைகள் என்பவர்கள் "புதுத்துணி" போன்றவர்கள். அவர்களுக்கு ஆசிரியர் விரும்பிய எந்த வர்ணத்தினை வேண்டுமானால் கொடுக்கலாம். நாம் செய்ய வேண்டியது விருப்பப்பட்ட வர்ணத்தில் அந்தத் துணியை நனைக்க வேண்டியது தான். அது போதும் ஆனால் பெரியவர்களோ பழைய துணி போன்றவர்கள். பழைய துணியானது நாம் கொடுக்க விரும்பும் வர்ணத்தினை மிக எளிதில் ஏற்றுக்கொள்ளாது, அதனை நன்றாகவும் ஈர்த்துக்கொள்ளாது.

- ஸ்ரீ சத்திய சாயி பாபா
(மாணவர்க்கான நித்திலக் கோவையிலிருந்து)

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சரணாகதி



- நீ ஏன் இவ்வளவு துன்பமாயிருக்கிறாய்? உன்னுடைய கவலைகளை என்னிடம் விட்டுவிடு. நான் அவற்றைப் பார்த்துக் கொள்வேன்.
- நீ என்னிடம் பூரண சரணாகதியடையத் தயாரானதும் நான் பொறுப்பேற்பேன். இதற்காகத் தான் நான் காத்துக் கொண்டிருக்கிறேன்.
- என்னிடம் பூரண சரணாகதியடையும் போது மேலும் நீ கவலை கொள்ளத் தேவையில்லை. பயங்கள், துன்பங்கள் அனைத்தையும் விலகவிடு.
- என்மீது நம்பிக்கையில்லைப் போல் தெரிகிறது. உன்னை என்னிடம் முழுமையாக அடைக்கலம் வை.
- சரணாகதியென்பது, உனது சிந்தனையை, கவலைகள், கஷ்டங்கள், பிரச்சனைகள் ஆகியவற்றிலிருந்து தூரப்படுத்தும் ஆற்றலேயாகும்.
- சகலதையும் என்னிடம் கையளித்து விட்டுச் சொல்லவும்: "கடவுளே சகலதையும் கவனிப்பீராக. உமது சங்கல்பமே நிகழட்டும்"
- இது எதைக் குறிக்கிறதென்றால் "கடவுளே உமக்கு நன்றி. எல்லாம் உம்மிடமே, எனக்கு மிக உகந்தது எதுவோ அதுவே நடைபெறும்"
- சரணாகதி என்பது எதிர்பார்ப்பு அற்றதாயும், நிகழ்வுகள் வித்தியாசமாக நிகழ்ந்தாலும் குழப்பமடையாதிருத்தலுமேயாகும்.
- நீ கவலைப்பட்டால், அது நீ நேசிக்கப்படுகிறாய், எனது மனதில் இருக்கிறாய், உனது வாழ்க்கை எனது பொறுப்பிலுள்ளது. என்னிடமிருந்து எதுவும் தப்ப முடியாது என்பவற்றை நீ நம்பவில்லை என்பதையே வெளிக்காட்டுகிறது.
- என்ன நடக்கும்? நிலைமை எப்படி மாறும்? என்பதைப் பற்றி யோசியாதே! இப்படியான பலவீனங்களுக்கு இடம் கொடுத்தால் நீ என்மீது போதியளவு நம்பிக்கை கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறாய்.
- உனது கவலைகளை நான் பொறுப்பேற்பதை விரும்புகிறாயா? இல்லையா? நீ மனக் கவலை கொள்வதை நிறுத்து. நீ முழுமையாகச் சரணடைந்தால் மட்டுமே உன்னை நான் வழி நடத்துவேன். நீ எதிர்பார்த்த பாதையிலிருந்து வித்தியாசமான பாதையில் கொண்டு செல்ல தேடும் போது நான் உன்னை என் கரங்களில் காவிச் செல்வேன்.
- உனது மனமே பதட்டத்திற்குக் காரணம். இத்துடன் சிந்தனைகளும், கவலைகளும் நீயே செய்யலாமென்ற ஆசையும் காரணிகளாகும்.
- அகமுகமாக என்பக்கம் திரும்பி "சுவாமியே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று தயவாகக் கேட்டதனால் எத்தனையோ தடவை உனது உலகியற் தேவைகளையும் ஆன்மீகத் தேவைகளுக்கும் கை கொடுத்துள்ளேன். அதன் பின்பு கண்ணைமூடி அமைதியாகத் தூங்குவாய்.
- முழுமையாக உன்னை என்னிடம் ஒப்படைக்கும் போது தான் உனது பிரார்த்தனை பலனளிக்கும்.
- துன்பத்தின் போது என்னை நோக்கி பிரார்த்திக்க வேண்டும் ஆனால் உனக்குப் பிடித்ததையே தரும்படி கேட்டு என்னிடம் சரணாகதியடைவதில்லை.
- இது எப்படியெனில் தனக்கு உகந்த மருந்தைவிட்டு விருப்பமான மருந்தை வைத்தியரிடம் கேட்கும் நோயாளியைப் போலாகும். இப்படிச் செயற்படாதீர்கள்.
- மிகவும் நெருக்கடியான சமயங்களில் இப்படிப் பிரார்த்தியுங்கள் " கடவுளே உம்மைப் புகழ்கின்றேன் இச் சமயத்தில் தேவையான, பிரச்சனைக்காக எனது நன்றி, இந்தப் பூமியில் தற்காலிகமாகத் தங்க வேண்டிய காலத்தில் இப் பிரச்சனையைத் தீர்க்க எது நல்ல வழி யென நீங்களே தீர்மானித்துத் தீர்த்துவிடுங்கள். எந்த நேரத்தில் எது தேவையென்பது உமக்குத் தானே தெரியும்"
- மனப்பூர்வமாக, கடவுளே தங்களின் சங்கல்ப்பமே நிகழும் என்று சொல்வது "கடவுளே எல்லாவற்றையும் பாரமெடுங்கள்" என்பதற்குச் சமன். இச்சந்தர்ப்பத்தில் நான் குறுக்கிட்டு, எனது சர்வ வல்லமையைப் பயன்படுத்தி, தீர்க்க முடியாத சிக்கலையும் தீர்த்து வைப்பேன்.
- சில வேளைகளில் துரதிஷ்டங்கள் குறைவதற்குப் பதிலாக கூடுவதாகச் சிந்தனை எழுகின்றதா? கவலைப்பட வேண்டாம். கண்களை மூடிக் கொண்டு நம்பிக்கையுடன் பின் வருமாறு கூறுங்கள்: "நீங்கள் சகலதையும் கவனிக்கவும், தங்களின் சங்கல்ப்பமே நிகழட்டும்"
- அப்போதது நான் அதையே செய்வேன். மேலும் அற்புதங்களையும் நிகழ்த்துவேன். உன்னைப் பற்றி சதா சிந்தித்தவண்ணமேயுள்ளேன். நீ உன்னை முழுமையாக ஒப்படைத்தால் மட்டுமே, என்னால் உனக்கு முழுமையாக உதவி செய்ய முடியும்.

ஜெய் சாயிராம்

*பகவானின் அருளுரைகளிலிருந்து*
*தமிழாக்கம் சி.சிவபாலன், யாழ்ப்பாணம்*

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சேவையினால் ஏற்படும் அகமாற்றம்



சேவை தன்னலமற்ற ஒரு மகத்தான பண்பு. உள்ளத்தில் அன்பு நிறைந்தவர்களால் தான் சேவை செய்ய முடியும்.

" என்பிதலதனை வெயில் போல் காயுமே
அன்பில் அதனை அறம்"

என்று அன்பின் பெருமையை எடுத்துக் கூறுகிறார் திருவள்ளுவர். என்பில்லாத புழு எவ்வாறு வெயிலில் துடிக்குமோ அவ்வாறே அன்பில்லாத வாழ்வும் துன்பமானதாகும் என்பதை மிக எளிதாக அருமையான உவமை மூலம் காட்டியுள்ளார் வள்ளுவர். அன்பு இல்லாத இடத்தில் தியாகம், அறம், பண்பு, தர்மம் எதுவுமே இருக்காது. இவ் அருங்குணங்கள் இல்லாத இடத்தில் சேவை மனப்பான்மை எவ்வாறு இருக்கும். சேவை செய்வதில் ஆனந்தம் காணும் உள்ளம் அன்பால் நிறைந்திருக்க வேண்டும். இதையே பகவான் எங்களுக்கு எப்போதும் எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிறார். "அன்போடு நாளைத் தொடங்குங்கள், அன்பினால் நாளை நிரப்புங்கள், அன்போடு நாளை முடியுங்கள்" என அருமையாக போதிக்கிறார் அன்பினால் நிறைந்த உள்ளமே சேவையின் அத்திவாரம்.

சேவையைக் கொடுப்பவரும் சேவையைப் பெறுபவரும் அன்பினால் நிரப்பப்படுவார்கள். அதனால் சேவை பெறுபவர்கூட வெகு விரைவில் சேவையாளனாக மாறும் அகமாற்றத்தைப் பெற்று விடுவார். தன்னலமற்ற சேவையால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. நாம் வீட்டில் சேவையை ஆரம்பித்தோமானால் அது விரிவடைந்து உலகத்துக்கே சேவை செய்யும் அகமாற்றத்தினை எமக்குத் தந்துவிடும்.

வீட்டில் தாய்தந்தையர், சகோதரர்கள், மூத்தோர் போன்றோருக்குச் சேவை அவசியமாகிறது. சேவை எனும் போது அவர்களுக்கு உதவி செய்வதாக அமையலாம். அன்புடன் ஆதரவுடன் கதைத்துப் பழகுவதாக அமையலாம். ஏழைகளுக்கு பணமோ அல்லது வேறு உதவிகளோ செய்வதாகக்கூட அமையலாம். உடல், உள்ளம் இரண்டினாலும் சேவை செய்யலாம். எமது செயற்பாட்டினால் மற்றவர் மனம் மகிழும் போது எமது சேவை பூரணப்படுத்தப் படுகிறது. எமது மனமும் பெரும் ஆறுதலை அடைகிறது. மனச்சுமை குறைந்து பெரும் திருப்தி ஏற்படுகிறது. சேவை செய்வதைச் சொல்லுவதிலோ எழுதுவதிலோ பலன் ஏதும் இல்லை. சேவை செய்து அனுபவப்பட்டவர்களுக்குத் தான் தெரியும் அதன் அருமை.

தன்னலமற்ற சேவையால் பெரும் ஆன்மீகத் திருப்தி பெற்று மாமனிதர்களாகிய வரலாற்று நாயகர்களும் பெரியார்களும் எம் கண்முன்னே உள்ளனர். "நான் இராம சேவைக்கே பிறந்தேன்" என்று கூறிய ஹனுமன் தெய்வநிலை பெற்ற வரலாறு இராமாயணத்தில் பேசப்படுகிறது. அந்தக் காவிய நாயகனின் வரலாற்றின் மூலம் சேவை செய்யும் உயர்ந்த மனப்பாங்கை வளரத்து ஆத்ம திருப்தி பெற்றவர்கள் பலர் உள்ளனர். இராமாயணத்தில் வரும் தம்பிமார்கள் சேவையின் இருப்பிடங்களாகவே காணப்படுகின்றனர். அண்ணன் இராமன் மேல் வைத்த அன்பினால் அவருக்கே வாழ்வை அர்ப்பணித்து தன்னலமற்ற சேவகர்களாக வாழ்ந்தனர். உலகம் உள்ளளவும் அவர்களை உயிரோடு உலவுவார்கள். மற்றவர்களுக்கு ஆதர்ச புருஷர்களாக இன்றும் இருக்கிறார்கள்.

ஆசிரியரது கற்பித்தலானது சம்பளம் பெறும் ஒரு ஊழியமாக அமையக்கூடாது. அது ஒரு மகத்தான சேவையாக அமைய வேண்டும். ஆசிரியர்

சேவை அன்பால் நிரப்பப் பட்டிருக்குமேயானால் மாணவர்களும் அன்பால் நிரப்பப்படுவார்கள். அன்பான சேவையால் அடாவடித்தனங்களை அகற்ற முடியும். மன இறுக்கமுள்ள மாணவர்களை அன்பினால் நிரப்பி அகமாற்றம் பெற்றவர்களாக மாற்ற முடியும். தண்டனையின் மூலம் திருத்தப்படாத சமூகத்தை சேவையின் மூலம் அகமாற்றம் செய்ய முடியும். அகமாற்றம் பெற்ற சமூகம் தான் நிலைத்த அன்புடன் வாழ முடியும்.

வைத்தியத் தொழில் சேவையின் மகத்துவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. நோயினால் வருந்தும் உள்ளங்களுக்கு அன்புடன் சேவை செய்யும் ஒருவர் அருகில் இருக்கும் போது அவர்களும் அன்பினால் நிரப்பப்படுவார்கள். அவர்களது உள்ளம் பண்படும். அவர்களும் அன்பின் சேவையின் மகத்துவத்தை உணர்வார்கள். அதன் மூலம் அவர்களும் அகமாற்றத்தை பெறுவர்.

தன்னலமற்ற சேவையையே எமது ஸ்வாமியும் எமக்கு அறிவுறுத்துகிறார். அதனால் எமக்கு ஏற்படும் அகமாற்றம் பற்றியும் விவரிக்கிறார். உண்மையில் நாம் மற்றவர்களுக்கு சேவை செய்யும் போது எமக்கே கூடியளவு நன்மைகள் கிடைக்கின்றன. முக்கியமாக நாம் அன்பினால் மலருகின்றோம். அன்பு ஒரு உலக மகா சக்தி. அன்பின் மூலம் சாதிக்க முடியாதது எதுவுமல்ல. அன்பு விரிவடையும் போது அது எல்லோரிடமும் அகமாற்றத்தை நிறைந்த உலகத்தை உருவாக்குகிறது. அதைவிட எமக்கு வேறு என்ன வேண்டும்.

சேவை செய்வதால் நாம் இறைவனின் அன்பைப் பெறுகிறோம். உலக ஆசைகள் மெல்ல மெல்ல எம்மை விட்டு அகன்று விடுகின்றன. இதமான பண்புகள் எம்மைச் சேருகின்றன. இறைவன் மகிழ்ச்சி அடைகிறார். சேவை செய்வதால் எதுவும் எம்மைவிட்டுச் செல்வதில்லை பதிலாக நாம் நல்லவற்றால் நிரப்பப்படுகிறோம். எமது நாளாந்தக் கடமைகளும் நன்றாக நடக்கின்றன. நாமும் அகமாற்றம் பெற்று ஆன்மீகத்தில் உயர்வடைகிறோம்.

ஜெய் சாயிராம்

*செ. அகல்யா*
*யாழ்ப்பாணம்*



புனித நூல்களில் பெற்றோர்களை மதிப்பளித்து வணங்கும் படி உங்களுக்குக் கூறப்பட்டுள்ளது. "மாத்ரு தேவோ பவ பித்ரு தேவோ பவ - தாயை கடவுளாகப் போற்றுக, தந்தையைக் கடவுளாகப் போற்றுக" அது தான் போதனை. ஆம் வேறு எவ்வாறு நீங்கள் அவர்களுக்கு நன்றி கூற முடியும்? உங்கள் அன்பையும் சேவையையும் விடவேறு எதனை பிரதியுபகாரமாக கொடுக்க முடியும்? உங்கள் நலனுக்காக அவர்கள் அனுபவித்த, அனுபவிக்கின்ற உங்களுக்கான கவனிப்பு, துன்பங்கள், பசி, தூக்க மின்மை எல்லாவற்றையும் சிந்தித்துப் பாருங்கள். அவர்களிடம் இரக்கம் காட்டுங்கள். மென்மையாகவும் இனிமையாகவும் இருங்கள். அநாகரிகமாகவும் மரியாதையின்றியும் இருக்காதீர்கள். அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு உங்களால் இயன்ற முயற்சியைச் செய்யுங்கள். உலகம் பற்றியும், ஆபத்துக்கள் பற்றியும் உங்களை விட அவர்கள் அதிகம் அறிந்தவர்களாதலால் அவர்களுக்கு கீழ்ப்படிவாக இருங்கள். அதுவே அவர்களை வழிபடும் முறையாகும்.

- ஸ்ரீ சத்திய சாயி பாபா 1969

ஓம் ஸ்ரீ சாயிராம்

# நான் யார்? நான் நானே தான்..... நான் கடவுள்



நாங்கள் "நான்" என்று உடலையே கருதி எங்கள் நாளாந்த கருமங்களைச் செய்து வாழ்க்கையை அமைத்துக் கொண்டோம். இதிலிருந்து விலகி எங்கள் வாழ்க்கையை செப்பனிடத் தயாராகி விட்டோமா? பகவான் கூறுகிறார் நானும் கடவுள் நீயும் கடவுள் நான் கடவுள் என்று என்னை உணர்ந்திருக்கிறேன். ஆனால் நீயோ கடவுள் என்று இன்னும் உணரவில்லை, உலக மாயையில் சிக்கி உன் தெய்வீகக் குணங்களை வெளிக் கொணர நீ இன்னும் தலைப்படவில்லை.

பகவான் கூறுகிறார் எல்லாவற் றையும் "நான்" செய்கிறேன் என்ற எண்ணத்தில் மயங்கி விடுவது முட்டாள் தனம். ஆகவே உன் சாதனைகளைப் பற்றிய வீண்பெருமை வேண்டாம். இறைவனே செய்கிறார். அதன் பலா பலன்களையும் அவரே அனுபவிக்கிறார் என்ற புனித உணர்வுகளை வளர்த்துக் கொள்ளுங்கள். "எல்லாமே இறைவனின் சங்கல்ப்பம் என்று உணர வேண்டும்" (ச.சா. ஜனவரி 2000, பக் 20) என்ற பகவானின் கூற்றை நினைவு கூர்ந்து "நான் நான்" என்பதை இந்த உடலுக்குரியதாக்காமல் எங்கள் இருதய வாசியாக இருக்கும் (ஆன்மா) இறைவனே என்று நினைத்துக் கொண்டு உங்கள் நாளாந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

"நான்" என்ற சொல் எல்லோருக்கும் பொதுவாக அமையும் பொழுது அது எல்லோரிடமும் பொதுவாக உள்ள ஆன்மாவையே குறிக்கின்றது. இந்த ஆன்மா தெய்வீக அம்சமானது. தெய்வீகத்தின் ஒரு பொறி. இதைத்தான் பகவான் நான் உன்னுள் இருக்கிறேன். You And I Are One என்னில் இருந்து வந்தவன் தான் நீ தெய்வீகம் (இறைவன்) எல்லா இடமும் நிறைந்திருக்கிறது. உருவங்கள் பல. கடவுளின் பல உருவங்கள் கொண்ட விக்கிரகங்கள் இருப்பது போல மனிதர்களிலும் முன்னைய கர்மாக்களைச் சுமந்து வந்த பல உருவங்கள் (மனிதர்கள்) இருக்கிறார்கள். இதை சாமான்ய மனிதர்கள் உணரத் தவறிவிட்டன. இதை உணர்ந்து செயலாற்றி, பகவான் வழிகாட்டும் பாதையை பின்பற்றினால் எங்களுடைய கர்மாக்களின் விளைவுகளிலிருந்து விதி விலக்குப் பெற்று எங்களில் உள்ள இறைத்தன்மை வெளிக் கொணரப்பட்டு அவருடைய அருளைப் பெற்று அவருடனேயே ஐக்கியமாகி விடுவோம். இந்த "நான்" என்பதை எமது உடலுக்கு பெற்றோர். இட்ட பெயர்களைக் கருதாது, எமக்குள் இருக்கும் இறைவனே என்று கருதி செயற்ப்படும் பொழுது நம் எண்ணம், சொல், செயல் எல்லாம் ஒருங்கிசைந்து, எமது வாழ்க்கை சத்தியத்தின் பாதையில் செல்கிறது. நாம் கர்மாக்களைச் செய்து (இறைவனால் செய்விக்கப்பட்டு) அதன் பலாபலன்களையும் இறைவனிடம் அர்ப்பணிக்கும் பொழுது **இறைவனுக்கும், எங்களுக்கும் உள்ள ஒருமைத்தன்மையை விளங்கிக் கொள்கிறோம்.** அவரிடமே எல்லாப் பொறுப்புக்களையும் விட்டு விடும் பொழுது நாம் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை.

பகவான் இதைத்தான் திரும்பத் திரும்ப கூறுகிறார். பலாபலன் எதிர்பார்த்து கருமங்களைச் செய்யாமல் எனக்கே யாவற்றையும் அர்ப்பணித்து விடு. இந்த உடலே கர்மாக்களை செய்து அதன் பலாபலன்களையும் எதிர்பார்த்து அனுபவிக்க நேரிடும் பொழுது சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடுகிறது. "நான்" என்பதை இந்த உடல் எனக் கருதி செயற்படும் பொழுது ஆணவம் தலைதூக்கி அகம்பாவத்தில் மிதக்கின்றோம். இன்றைய நிலையும் அதுவே.

இறைவனே எமக்குள் இருந்து செயற்படுவதன் மூலம் உன் உடல் பலத்திற்கு மதிப்புக் கொடுக்காமல், ஆணவத்தை தலைதூக்கச் செய்யாமல் ஆன்மீக பலத்தை உன்னுள் வளர்த்தெடுக்கிறாய். உடல் பலத்தை விட ஆன்மீக பலம் எவ்வளவு மகிமை வாய்ந்தது என்பதை உணரத் தலைப்படுகிறாய். இந்த ஆன்மீக வளர்ச்சியில் "நான்" என்ற பதத்துக்கு உரிய இடம் கொடுக்கும் பொழுது தெய்வீகச் செயல்களே எங்கும் பிரதிபலிக்கின்றன. தெய்வீக அன்பு உன்னுள் ஊற்றெடுக்கின்றது எல்லாவற்றிலும் தெய்வீகத்தை காண்கிறாய். நீயும் தெய்வீக அம்சம் உள்ளவனாகவே மற்றவர்களால் கருதப்படுகிறாய். இந்த இயற்கையே தெய்வீகமானது என உணரத் தலைப்படுகிறாய். பகவான் கூறும் இந்த அடிப்படைத் தத்துவத்தை விளங்கிக் கொண்டு, விழிப்புடன் செயல் புரிவதன் மூலம் இறைவனின் அன்புக்குள்ளாகி அவருடனேயே சங்கமமாகி விடுகிறாய்.

இறைவனே எம்முள் இருந்து "நான்" என்ற சொல்லுக்குரியவராகி செயற்படுவதாகக் கருதி, அவருக்கே பலாபலன்களை அர்ப்பணிப்பதன் மூலம், அவர் எங்களுடைய கர்மாக்களின் விளைவுகளை தாங்கிக் கொண்டு எங்களுக்கு சமூக விடுதலை அளித்து "எல்லாம் ஒன்று" என்பதை தெளிவாக்குகிறார். சனாதன சாரதியில் "நான்" யார் என்ற பதத்துக்கு அவர் தரும் விளக்கமும்இதுவே. ஒரே வாக்கியத்தை அதாவது "நானும் கடவுள், நீயும் கடவுள்" என்று ஏன்? திரும்பத் திரும்பச் சொல்கிறார். என்று சலிப்புக் கொள்ளாமல் அதை இதயத்துக்கு எடுத்து எங்கள் நாளாந்த வாழ்க்கையில் எங்கள் வாழ்க்கையை செப்பனிடக்கூடிய பின்பற்றக்கூடிய, வழிமுறைகளைப் பயிற்சி செய்து நம் வாழ்க்கை முறையில் (Educare) தெளிவு காண்போமா?

இதன் மூலம் எங்கள் அகம்பாவத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து, கர்ம வினைகளின் தாக்கங்களிலிருந்து விடுபட்டு எங்கள் செயல்கள் மூலம் துன்பம், கவலைகள் எய்தாமல் "அனைத்தும் செய்பவர் சுவாமியே, நான் ஒரு கருவியே. அனைத்தும் சுவாமியின் தயையே. சுவாமியின் சங்கல்ப்பமே" என்ற விவேகத்துடன் நாம் சாதனைகளைப் புரிவோம். (ச.சாரதி 2006 மார்ச், பக் 22)

இப்பயிற்சி மூலம் எங்கள் எண்ணங்கள் உயர்ந்த எண்ணங்களாக சொற்கள் இதய மொழியாக செயல்கள் தெய்வீகச் செயல்களாக பகவான் கூறும் "நான் யார்?" என்ற வாக்கியத்தின் அடிப்படைத் தத்துவத்தை விளங்கிக் கொண்டு எங்கள் வாழ்க்கைப் பாதையை செப்பனிட்டு எல்லா உயிர்களிலும் இறைவனைக் காண்போமாக.

சாயி அடியார்களினால் நாளாந்த பயிற்சிக் குள்ளாக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் அனுபவங்களை சாயி அடியார்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்.

1) காலை எழுந்தவுடன் நம் புத்தி, மனம், ஐம்புலன்களின் செயற்பாடுகள் யாவற்றையும் எமக்குள் இருக்கும் இறைவனிடமே ஒப்புவித்து அவரை ஒவ்வொரு நாளுக்கும் வழிகாட்டும்படி கோருதல்.

2) சகல கருமங்களையும் இறை சிந்தனை யுடனேயே புரிந்து எல்லா உயிர் இனங்களிலும் இறைவன் இருக்கிறார் என்ற விழிப்புணர்வுடன் செயற்படல்.

3) உணவுக்கு முன் இறைவனுக்கு உணவை அர்ப்பணித்து சாப்பிட்டல் (உணவு மந்திரம் ஓதி)

4) ஒவ்வொரு நாளும் வழிகாட்டியதற்கு இறை வனுக்கு நன்றி கூறி உனது கருமங்களின் பலாபலன்களை இறைவனுக்கே அர்ப்ப ணித்து நித்திரைக்குப் போதல்

இதில் முதலாவதை ஒழுங்காக உறுதியாக கடைப்பிடித்தால் மற்றவை ஒழுங்காக தானே நடந்து கொண்டிருக்கும்

கர்மயோகம் என்றால். வேதங்கள் கூறுகின்ற கடமை, கர்மங்களை அனுசரிப்பது. பாபா அவர்களின் கூற்றுக்களை வேத வாக்குகளாக எடுத்து, அவர் இட்ட கட்டளை நிறைவேற்றுவது (ச.சா 2006 - பக் 23)

ஜெய் சாயிராம்

*பொ. யோகேஸ்வரராசா*
*கொக்குவில்*

***ஆசிரியர் குறிப்பு:***

*அன்பன் யோகேஸ்வரராசா அவர்கள் 21.09.2009 அன்று நிலையத்தில் பஜனை பாடிக் கொண்டிருக்கும் போதே இறைவனடி சேர்ந்தார்.*

ஓம் ஸ்ரீ சாயிராம்

# கல்வீசித் தலையிற் காயம் ஏற்படுத்தியவனையும் மன்னித்து நல்லது செய்வது மனித தர்மம்



மன்னர் ஒருவர் ஊர் சுற்றிக் கொண்டு வரும் போது சோர்வின் காரணமாக வழியில் தென்பட்ட ஓர் அடர்ந்த மாமரத்தின் நிழலில் இளைப்பாறலானார். அவரது காவலர்களும் அங்கேயே தங்கி விட்டனர்.

எங்கிருந்தோ ஒரு கல் பாய்ந்து வந்து இளைப்பாறிக் கொண்டிருந்த மன்னரின் தலையைத் தாக்கிற்று. உடனே அரசர் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மன்னர் காயத்திற்கு அரண்மனை வைத்தியசாலையிற் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

காவலர்கள் கல் எறிந்தவனைத் தேடலாயினர். அவர்கள் கண்களில் மாமரத்தின் பக்கம் மாம்பழத்தைத் தின்று கொண்டிருந்த ஒரு முதியவர் தென்பட்டார். அவரே கல்லை வீசியிருக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெளிவாயிற்று. காவலர்கள் அமைச்சரின் முன் கொண்டு வந்து அந்த முதியவரை நிறுத்தினார்கள். அவருக்கு மரண தண்டனை வழங்கினார் மந்திரி. முதியவரோ ஒன்றும் புரியாது திகைத்துக் கொண்டிருந்தார்.

மரண தண்டனை நிறைவேற்றும் முன் அரசரைச் சந்தித்துத் தண்டனையாளர் தன் குறையைச் சொல்லிக் கொள்ளும் வழக்கம் இருந்தது. அதன்படியே முதியவர் அரசர் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்.

"இந்த அந்தணரை ஏன் அழைத்து வந்தீர்கள்" என்று அமைச்சரிடம் வினாவினார் அரசர். "அரசரே" தங்கள் தலையில் கல் வீசியவர் என்று அறிவித்தார் அமைச்சர்.

முதியவர் அரசரைப் பார்த்து "பெருமானே, நான் பசியால் வாடிக் கொண்டிருந்தேன். இந்த மாமரத்தில் பழங்கள் தொங்குவதைக் கண்டதும் தொலைவிலிருந்து கல் வீசினேன். அது தவறித் தங்கள் தலையைத் தாக்கியதற்காக மிகவும் வருந்துகிறேன். அறியாது செய்த இந்த பிழையைப் பொறுத்து என்னை மன்னிக்க வேண்டும்" என்று மன்றாடி கேட்டுக் கொண்டார்.

"மரத்தின் மீது நீர் வீசிய கல்லால் உமக்கு என்ன கிடைத்தது என்று வினாவினார் அரசர். "மன்னர் பெருமானே! இரண்டு பழங்கள் கிடைத்தன" என்று பணிவாகக் கூறினார் முதியவர். சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார் மன்னர். பின்னர் அமைச்சரைப் பார்த்துச் சொன்னார் "இந்த முதியவரை தண்டனையிலிருந்து விடுதலை செய்யுங்கள். அத்துடன் இவருக்கு நிறைய செல்வத்தையும் கொடுத்து அனுப்பி வையுங்கள்.

அரசரின் கட்டளைக் கேட்ட அமைச்சர் திகைப்பில் மூழ்கிவிட்டார். தன் தலையில் கல்லை வீசியவனுக்கு இத்தகைய மரியாதையா? மன்னருக்கு ஏதேனும் மூளைக் கோளாறா எனக் கூட நினைத்தார். அமைச்சர்.

அமைச்சரின் உள்ளத்தை உணர்ந்த அரசர் அவரிடம் "அமைச்சரே! அறிவே இல்லாத மரம் தன் மீது கல் வீசியவருக்கு இரண்டு பழங்களை கொடுத்துள்ளது. ஆனால் அதே கல் என் மீது விழுந்தது என்தற்காக நான் இவருக்குத் தூக்குத தண்டனையா கொடுப்பது? எனவே தான் என் முடிவை இப்படி மாற்றினேன். எனது முடிவை நிறைவேற்றும்" எனக் கூறினார்.

ஜெய் சாயிராம்

*செல்வி. செ. அகல்யா*
*யாழ்ப்பாணம்.*

ஓம் ஸ்ரீ சாயிராம்



# கேள்வி ~ பதில்

**மனிதனும் இறைவனும் வேறு வேறானவர்களா?**

இல்லை. மனிதன் உடலால் கட்டுண்டு தன் வாழ்க்கையை நடத்துகிறான். ஆத்ம தத்துவத்துடன் தன்னை இணைத்துக் கொள்ளும் போது தான், அவனால் அத்வைத தத்துவத்தை புரிந்து கொள்ள முடியும். எதுவுமே வெளி உலகில் காணப்படுவதில்லை. அனைத்துமே உன் உள்ளிருந்து வெளிப் படுபவையே. உனதுள்ளிருக்கும் ஆத்மாவின் வெளிப்பாடுகள்தான் எல்லாமே. ஆனால் மனிதனுக்கு எதுவுமே புரிவதில்லை. எல்லாம். தன்னுள்ளேயே இருப்பவை என்பதை உணராமல் வெளிப்புறமான, உலகியலான பொருட்களின் மேல் ஆசையை ஏற்படுத்திக் கொள்கிறான்.

**ஜீவராசிகளின் இயல்பான தன்மை எப்படிப் பட்டது?**

சமுத்திரத்திலிருந்து பிறந்து உருவான நதியின் நீர் வடிவத்திலும், சுவையிலும் வேறுபட்டிருப்பினும் கடைசியில் சமுத்திரத்திலேயே சங்கமமாகிறது. இதற்கிடையில் அது எத்தனையோ வகையான சோதனைகளுக்கு உள்ளாகிறது. அதன் மூலமே தூய்மை அடைகிறது. ஆவியாகி மேகமாகி, மழையாய்ப் பொழிந்து, நதியாக உருமாறி ஓடிக் கடைசியாக கடலில் சங்கமிக்கிறது. இவ்வாறு ஆவியாக இருக்கும் நிலையே சத்தியம் என்று கொண்டால், மேகம் தர்மம் என அழைக்கப்படலாம். மழையாய்ப் பொழியும் நீர்த்துளிகள், அன்பு எனும் பிரேமைக்கு ஒப்பிடலாம். புரண்டு ஓடும்நதி "Bliss" என்கிற பேரானந்தம். அது கடைசியில் இறைவனின் கருணா சமுத்திரமான "Grace" உடன் ஐக்கியமாகிறது என்றாவது ஒரு நாள் இலக்கை அடைந்து தான் தீர வேண்டும். எங்கிருந்து புறப்பட்டு வந்தோமோ, அவ்விடத்தை அடைவது தான் ஜீவராசிகளுக்கு இயல்பான தன்மை.ஆகையால் மனிதனின் தனிப்பட்டவனாக வாழத்துவங்கினாலும் முடிவில் தெய்வத்தில் சங்கமிக்கிறான்.

**தெய்வீகத்தின் மேல் நம்பிக்கை உடையவர் எப்படி இருப்பார்**

தெய்வீகத்தின் மேல் நம்பிக்கை உடையவருக்கு எதிலும் தவறு இருப்பதாகத் தோன்றாது. இதைத் தான் அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் போதித்தார். பகவத் கீதையில் கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார் "அர்ஜுனா! ஏன் சந்தேகப்படுகிறாய் இந்த யுத்தத்திற்குக் காரணம் நான் தான்! இறப்புக்கும் நானே காரணம். ஆகவே இறப்பும் அதை ஏற்படுத்துபவனும் நானே. நானே சொல்கிறேன். நீ வெறும் கருவி மட்டுமே நானே இயக்குகிறேன். நீ உனக்குக் கொடுத்த பாத்திரத்தை உணர்ந்து நடிக்கிறாய்" அவரே இயக்குனர். அவரே நடிகர். இந்த இரண்டிற்கும் இடையே உள்ள உறவைப் புரிந்து கொண்ட மனிதன் இன்பத்தாலும் துன்பத்தாலும் பாதிக்கப்படுவதில்லை.

**சுவர்க்கத்தின் கதவுகள் எப்பொழுது எங்களுக்காகத் திறக்கும்?**

எந்த மனதை புத்திரனுக்காகவும், மித்திர னுக்காகவும், செல்வத்துக்காகவும், வியாபாரத் திற்காகவும், பயன் படுத்துகிறீர்களோ, அதே மனதை இறைவனது பாதக் கமலங்களின் மீது செலுத்தினால் உங்களுக்காக சுவர்க்கத்தின் கதவுகள் தானாகத் திறக்கும் ஆனால் மனிதனின் சிந்தனைகள் எப்போதும் உலகியலாகவே இருக்கின்றன. மனதுக்கு எப்போதும் சுகம் வேண்டும், இதம் வேண்டும் இடைவிடாது தனது சுக சௌகரியங்களையே மனிதம் சிந்திக்கிறது. அத்தகைய மனத்தை ஒரு கணமாவது இறைவனின் தாமரைப் பாதங்களின் மீது செலுத்தினால் அமைதி நிச்சயம் ஏற்படும்.

**தியாகம் என்றால் என்ன?**

தியாகம் என்றால் எல்லாவற்றையும் உதறிவிட்டு செல்வது என்பது பொருளல்ல. உனது உலகியல் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் சேமித்து வைத்துக் கொள்ளலாம் தவறில்லை. ஆனால் மிதமான ஆசைகளை வளர்த்துக் கொள்வது தகாது. அளவுக்கு அதிகமான ஆசைகள் மனத்தையும், அதுபோகும் வழியையும் தவறாக ஆக்கி விடுகிறது. மனிதன் பித்துப் பிடித்தவனாக மாறி விடுகிறான். உனக்கு இருப்பதை வைத்துத் திருப்தியடைய வேண்டும். உங்களது கடமைகளை முழுமை யாகச் செய்யுங்கள்.

**பிறந்ததன் பயனை அடைய எதை உணர வேண்டும்?**

உலகம் வேண்டுவதெல்லாம் சத்தியமும், தியாகமும் தான். இந்த இரண்டு மட்டுமே போதும் இந்த உலகத்தையே மாற்றிவிட முடியும். சத்தியம் உட்புற இதயத்தைத் தூ ய்மைப்படுத்துகிறது. தியாகம் வெளிப்புற உலகத்தைச் சேர்ந்தவற்றை தூய்மைப்படுத்து கிறது. உள்ளே, வெளியே என எல்லா இடத்திலும் நாராயணனே நிறைந்திருக்கிறார். இதை உணராமல் பிறந்ததிலிருந்து மாறிக் கொண்டிருக்கும் உலகியல் பொருட்களையே பெரிதாக மதித்து வாழ்ந்து நேரத்தை வீணாக்கி விடுவதில் என்ன பயன் இருக்க முடியும்? நீ கடவுளின் மேல் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதன் மூலம் பிறந்த பிறவியின் பயனை அடைய வேண்டும்.

**பிரம்மனைக் காண எதை உணர வேண்டும்?**

மனிதன் தன் செயல்கள் அனைத்துமே இறைவனின் இயக்கத்தால்தான் நடைபெறுகின்றன என உணரும் போது, அநீதி என்பதற்கு இடமே இல்லை. தான் தனிப்பட்ட மனிதன் என்ற நினைவு ஏற்படும் போது தான் அவன் பாதை தவறுகிறது. இது அவனது மாயை. இந்த மாயையை விடவில்லையெனில் அவனால் பிரம்மனைக் காண இயலாது. உடல் மேல் வைத்த பற்றும் மாயைதான். செயலாற்ற உடல் அவசியம் தான். இருப்பினும் அது வெறும் கருவியே. அவன் ஆஸ்திகனோ, நாஸ்திகனோ எதுவானாலும் சரி எல்லோரிடமும் தெய்வீகம் உள்ளுறைகிறது. ஆகையால் அத் தெய்வீகத்தின் கட்டளையை ஏற்று அவ்வழியே வாழ்க்கையை நடத்த வேண்டும்.

**அன்பு செலுத்த சுலபமான வழி எது?**

அன்பு மூலம் எதையும் சாதிக்க முடியும். அன்பின்றி வாழ்க்கை பயனற்றது. இறைவனை நேசிக்க சிறந்த வழி "Love All Serve All" எல்லோரையும் நேசி, எல்லோருக்கும் சேவை செய். சேவை செய்வதே அன்பு செய்ய சுலபமான வழி. யார் சேவை செய்கிறார்களோ, யார் சேவையை ஏற்றுக் கொள்கிறார்களோ இருவருமே தெய்வீகமானவர்கள்.

**நமக்கு இந்த மனித வாழ்க்கை எதற்காகத் தரப்பட்டது?**

இறைவனின் அருகாமையை உணருவதற்காகவே மனிதனுக்கு இத்தகைய விலையுயர்ந்த மனித வாழ்க்கை பரிசாக அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் கடவுளிடமிருந்து வந்திருக்கிறோம். அவரிடமே சென்று ஐக்கியமாக வேண்டும். அதுவே நமது இலக்கு. அதுவே நம் வாழ்க்கையின் குறிக்கோள். அல்லது நோக்கம். இந்த உண்மையை நம் இதயத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

ஜெய் சாயிராம்

*தொகுப்பு:*
*நா. ஏகாம்பரநாதன்,*
*யாழ்ப்பாணம்.*



*மென்மையாகவும், இனிமையாகவும் பேசு. துன்பப்படுவோர், பொருள் இழந்தோர், அறியாதோர் மீது இரக்கப்படு. உரிய நேரத்தில் அவர்களை அமைதிப்படுத்தும் வார்த்தைகளைப் பேசு.*

*- ஸ்ரீ சத்திய சாயி பாபா*

ஓம் ஸ்ரீ சாயிராம்

# காலக் கணக்கு



| | | |
|---|---|---|
| இமைகள் 18 | - | 1 காஷ்டை |
| காஷ்டை 30 | - | 1 கலை |
| கலை 30 | - | 1 முகூர்த்தம் |
| முகூர்த்தம் 30 | - | 1 இராப்பகல் |
| இரவு பகல் 30 | - | 1 மானிட மாதம் |
| மானிட மாதம் 12 | - | 1 மானிட வருடம் |
| மானிட வருடம் 1 ( உத்தராயணம் - 6 மாதம் தடசிணாயம் - 6 மாதம்) | - | 1 தேவர்களின் நாள் |
| மானிட வருடம் 30 | - | 1 தேவர்களின் மாதம் |
| தேவர்களின் மாதம் 12 | - | 1 தேவர்களின் வருடம் |
| தேவர்களின் வருடம் 4800 | - | கிருதய யுகம் |
| தேவர்களின் வருடம் 3600 | - | திரேதா யுகம் |
| தேவர்களின் வருடம் 2400 | - | துவாபர யுகம் |
| தேவர்களின் வருடம் 1200 | - | கலியுகம் |
| தேவர்களின் வருடம் 12000 (நான்கு யுகம்) | - | 1 தேவயுகம் |
| தேவ யுகம் 1000 | - | 1 பிரம்ம நாள் |

பிரம்மாவானவர் தனது இரவின் இறுதியில் விழிப்புற்று பூலோக, புவர்லோக, சுவர்லோகமாகிய பெரிய உலகைப் படைக்க மனதில் எண்ணமுடையவராகிறார்.

யுகங்களுக்கு கால அளவு குறைக்கப்பட்டது போல மானிடர் வயதும் நூறு நூறாகக் குறைக்கப்பட்டதுடன் விதிக்கப்பட்ட தர்மங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

| **யுகம்** | **மானிட ஆயுள்** | **யுக தர்மம்** |
|---|---|---|
| கிருதய யுகம் | 400 வருடங்கள் | கடுந்தவம் |
| திரேதாயுகம் | 300 வருடங்கள் | ஆன்மஞானம் |
| துவாபர யுகம் | 200 வருடங்கள் | வேள்விகள் |
| கலியுகம் | 100 வருடங்கள் | தாராள கொடை |

மனிதராசியை உண்டாக்க வேண்டியே செயற்கரும், தவம் செய்து புனிதரான பிரஜாபதிகளை முதலில் உண்டாக்கினேன்

மரீசி, அத்திரி, ஆங்கிரசர், புலஸ்தியர், புலகர், கிருது, பிரசேதர், வசிஷ்டருடன் பிருகு, நாரதர் என்னும் பதின்மர் இவர்களே.
(ஆதாரம்: மனுதர்ம சாஸ்திரம் - மொழி பெயர்ப்பு: திருலோகசீதாராம்)

ஜெய் சாயிராம்

# பிராந்தியச் செய்திகள்



## வடபிராந்தியம்

- 45 நாள் குடும்ப பிரார்த்தனை சுசல அங்கத்தவர்களும் இரவு 7.00 மணி தொடங்கி 7.30 மணி வரை குடும்பப் பிரார்த்தனை செய்கிறார்கள். இது 9.10.2009 தொடங்கி 22.11.2009 அன்று முடிவடைகிறது. நாட்டில் அமைதி நிலவ வேண்டுமென்பதே பிரார்த்தனையின் நோக்கம்.

- ஆன்மீக சாதனா பயிற்சி முகாம் 10, 11 அக்டோபர் 2009 திகதிகளில் இடம் பெற்றது. 200 சாதகர்கள் பங்கு பற்றினார்கள்.

- இளைஞர்கள் பிரிவின் சாயியை நோக்கிய பயணம்:

  தேசிய மட்டத்தில் இச் சாதனை மேற் கொள்ளப்படுகிறது. 2010 அக்டோபர் அல்லது செப்டம்பரில் பிரசாந்தி நிலையம் சென்று சுவாமியின் தரிசனம் (சம்பாஷணை) பெறுவதே நோக்கம் தனியாகவும் குழுவாகவும் சாதனா பயிற்சிகள் தெரிவு செய்து கடைப்பிடிக்கப்படுகின்றன. மாதாந்த செயலமர்வுகள் சகல பிராந்தியங்களிலும் நடாத்தும்படி ஆலோசனை கூறப்பட்டுள்ளது. வடபிராந்தியத்தில் 68 இளைஞர்கள் 18.10.2009 அன்று முதலாவது செயலமர்வில் கலந்து கொண்டார்கள்.

- சத்திய சாயி பாடசாலை, மானிப்பாயின் 7 ஆவது பரிசளிப்பு விழா 01.11.2009 அன்று நிகழ்ந்தது. பேராசிரியர் ஞானக்குமாரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இளைஞர் பிரிவின் சாயியை நோக்கிய பயணம் தொடர்பில் தேசிய மட்டத்தில் சாதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கொழும்பு இளைஞர்கள், யாழ்ப்பாண இளைஞர்கள் சாதனை, பயிற்சிப் பட்டறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.









பகவானின் 84 ஆவது அவதார தினத்தையொட்டி தெரிவு செய்யப்பட்ட வசாவிளான் சுதந்திர புரக் கிராமத்திலுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு விநியோகமும், நீர்வேலிக்கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட குடும்பத்தின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தொழில் ஊக்குவிப்பாக தையல் இயந்திரமும் வழங்கப்பட்டது.







